பட்டு, பருத்திப் புடைவைகள் மற்றும் றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

ஞானம் ஆடையகம்

54, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கோயில் தேவைகளுக்கான குடை, கொடி, ஆலவட்டம், வாகுமாலை என்பவற்றுக்கு

ஞானம் ஆடையகம்

54, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 06 திங்கட்கிழமை (20 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 113

# அரசே இறுதி முடிவுகளை எடுக்க வேண்டும்
# ராணுவம் முடிவு எடுக்க அனுமதிக்கக்கூடாது

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் நேற்று தமிழீழம் எங்கும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

தியாக தீபம் அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று தமிழீழம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பமாகின.

தியாக அன்னையின் திருவுருவப் படங்கள், முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பந்தல்கள் தோறும் வைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி வரை அன்னையின் நினைவாலயங்களில் தினமும் நெய் விளக்கேற்றி மாலை அணிவித்து, தியாக வணக்கம் செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தில் இதற்கான விரிவான ஏற்பாடுகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ். மாவட்ட வட்டப் பிரதேசங்களில் ஏப்ரல் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்படும்.

இறுதி நாளான ஏப்ரல் 19 ஆம் திகதி கோட்ட மட்டத்திலான உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

இறுதி நாளில் ஆண்டு நினைவுப் பொதுக்கூட்டங்களும் இடம்பெறும்.

மேலும் கிராமங்கள் தோறும் அன்னையின் தியாகத்தின் மகிமையை எடுத்துக் கூறும் கருத்தரங்குகள், கலை நிகழ்வுகள் மற்றும் வீடியோ படக்காட்சிகள் போன்றவற்றை நடத்தவும், ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் கிராமங்கள் தோறும் அன்னையின் நினைவாக சிரமதானங்களும் மேற்கொள்ளப்படும். அன்னை நினைவாக பொது அறிவுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (உ–5)

## எம்மை விடுவித்த புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு நன்றி கூறவேண்டும்

### விடுதலை பெற்ற கான்ஸ்டபிள் ரூபவாஹினிக்கு பேட்டி

கொழும்பு, மார்ச் 20

''எம்மை விடுவித்தமைக்காக விடுதலைப் புலிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். ஸ்ரீலங்கா அரசும் புலிகளுக்கு நன்றி தெரிவிக்க வேணடும். சமாதான நடவடிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசு வேகப்படுத்தவேண்டும்.''

—இவ்வாறு விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட பொலீஸ் கான்ஸ்டபிள்கள் மூவர் நேற்று கொழும்பு நாரஹன்பிட்டியவில் உள்ள பொலீஸ் ஆஸ்பத்திரியில் வைத்து தெரிவித்தனர்

அவர்கள் இக்கருத்தைக் கூறுவதை ஸ்ரீலங்கா ரூபவாஹினி நேற்றிரவு தனது செய்தி அறிக்கையில் ஒளிபரப்பியது.

விடுவிக்கப்பட்ட பொலீஸார் மற்றும் ராணுவச் சிப்பாய் ஆகியோர் பொலீஸ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவர்களில் ஒருவர் விசேட சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளில் ஒருவர் அல்லது இருவரே பாதிக்கப்பட்டிருந்தனர் என்றும் —

ஏனையோர் அவ்வளவு பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்றும்—

அடுத்த இருநாட்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பெரும் நடவடிக்கைக்கு அரசுப் படைகள் தயாராகுகின்றன?

யாழ்ப்பாணம், மார்ச். 20

கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அரசுப் படைகள் தயாராகி வருவது போல் தெரிவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு கஞவாஞ்சிக்குடி இராணுவ முகாமில் பெருமளவு சிமெந்து பயன்படுத்தப்பட்டு நிலத்துக்குக் கீழான பதுங்குகுழிகள், அறைகள் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன; போர்த்தளபாடங்களும், துருப்புக்களும் அதிக அளவில் அங்கு குவிக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டம் இங்கினியாகல, கொண்டைவெட்டுவான் மற்றும் வாழைச்சேனை கடதாசி ஆலை பகுதிகளில் அமைந்துள்ள படைமுகாம்களிலும் படையினரின் பயிற்சி மற்றும் ஒத்திகை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

கல்லடி, கும்புறுமூலை, கொக்கட்டிச்சோலை, குடும்பிமலை, கஞ்சிகுடிச்சாறு, சல்முனை, ஆயித்தியமலை, பூமாஞ்சோலை பகுதிகளிலும் படையினரின் முன்னணிக் காவலரண்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன; சோதனை நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன.

படையினரின் இந்நடவடிக்கைகள் பெரும் தாக்குதலுக்கான முன்னேற்பாடாக இருக்கலாம் என இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்தனர். [உ]

## பிரிட்டிஷ் நிதி அமைச்சருடன் பேசவே சந்திரிகா 3 நாள் லண்டனில் தாமதம்!

கொழும்பு, மார்ச் 20

பிரிட்டிஷ் நிதி அமைச்சர் கென்னத் கிளார்க்குடன் முக்கிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே ஜனாதிபதி சந்திரிகா தாம் கொழும்பு திரும்புவதை மூன்று தினங்கள் தாமதித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க் மற்றும் லண்டன் பயணங்களை முடித்துக்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை சந்திரிகா கொழும்பு திரும்புவதாக இருந்தது.

பிரிட்டிஷ் நிதி அமைச்சருடன் உயர் நிலைப் பேச்சுகளை நடத்த அவர் கடைசி நேரத்தில் தீர்மானித்ததன் காரணமாக அவரது வருகை நேற்று இரவு வரை தள்ளி வைக்கப்பட்டது.

நேற்று மாலை அவர் கொழும்பு திரும்பினார். (உ–எ)

## மூத்த தலைவர்களை விலகுமாறு ஐ.தே.க. இளம் எம்.பிக்கள் வற்புறுத்து

கொழும்பு, மார்ச் 20

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன் வரிசைத் தலைவர்களில் சிலர் அரசியலில் இருந்து ஒதுங்கவேண்டும் என்று ஐ. தே. கவின் இளம் எம். பிக்கள் பலர் வற்புறுத்த ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 17 ஆண்டு கால ஆட்சியின் காரணமாக மக்களின் நம்பிக்கையை இழந்த அத்தலைவர்களுக்கு தாங்கள் இனியும் ஆதரவளிக்கத் தயாராக இல்லை என்றும் இளம் எம். பிக்கள் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட தலைவர்கள் ஒதுங்கினால், கட்சியை வழி நடத்த மாற்றுத் தலைமை இருக்கின்றதா என்ற கேள்விக்கு— இளம் எம். பிக்கள் மத்தியில் திறமையுள்ள பலர் உள்ளனர் என்று இளம் எம். பிக்கள் பதில் அளித்தனர்

முச்சந்திமுரளி



அப்ப...... வாத்திமாரின்ரை தரம் அறியவும் டெஸ்ட் வைப்பினமோ .... !

## மாணவர் தரம் அறிய இனி "அளவு கோல் பரீட்சைகள்"

கொழும்பு, மார்ச் 20

மாணவர்களின் கல்வித் தரத்தை அறியும் முகமாக 'அளவுகோல் பரீட்சை' களை நடத்த உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது

இப்பரீட்சைகள் நாடெங்கிலும் உள்ள சகல பாடசாலைகளிலும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் நடத்தப்படும்.

பரீட்சைகளுக்குத் தேவையான சாதனங்களை தேசிய கல்வி நிறுவனம் வழங்கும்.

ஆரம்பத்தில் மொழி, கணிதம் ஆகிய இரு பாடங்களுக்கு மட்டும் இப்பரீட்சைகள் நடத்தப்படும் என்றும்—

பின்பு ஏனைய பாடங்களுக்கும் பரீட்சைகள் நடத்தப்படும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பரீட்சைகளின் போது, எதிர்பார்க்கும் மட்டத்தை எய்தாத மாணவர்களினதும், பாடசாலைகளினதும் தரத்தை உயர்த்த உரிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பதில் அமைச்சர் தலைமையில்

## கிறீஸ்த்தவ யாத்திரிகர் குழு மடுவுக்கு வந்து திரும்பியது

வவுனியா, மார்ச் 20

மடு மாதா தேவாலயத்துக்கு யாத்திரை மேற்கொண்ட பதில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் பல நூற்றுக் கணக்கான கிறிஸ்தவ யாத்திரிகர்களுக்கும் உரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

நூற்றுக்கு மேற்பட்ட பஸ்கள் மற்றும் வாகனங்களில் வந்த யாத்திரிகளுக்கு முதலில் வவுனியாவில் வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை ஐந்து மணிக்கு பிராமணாளன் குளம் பகுதியை யாத்திரீகர்கள் குழு வந்தடைந்த போது — குழுவினரை அங்குள்ள புலிகளின் சோதனை முகாம் பகுதியில் வைத்து புலிகளின் மன்னார் மாவட்ட தளபதி லக்ஷ்மன் வரவேற்றார்.

பின்னர் யாத்திரிகர்கள்குழு மடுப்பகுதியை நோக்கிச் சென்ற போது வழியில் — வீதியின் இரு மருங்கிலும்— கூடி நின்ற மக்கள் கைகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 150 இலங்கையர்களுக்கு மருத்துவபீட அனுமதி

### ரஷ்ய பல்கலைக்கழகம் வழங்கும்

கொழும்பு, மார்ச். 20

ரஷ்ய பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு 150 இலங்கை மாணவர்களைத் திரட்டுவது என்று ரஷ்ய சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திஎய்தியவர்களிலிருந்து இவர்கள் தெரிவு செய்யப்படுவர். 7 ஆண்டுகள் நீடிக்கும் இந்த மருத்துவப் படிப்பை மேற்கொள்வதற்கான செலவு 3 ஆயி அமெரிக்க டொலர்கள் என்று கொழும்பில் உள்ள ரஷ்ய கலாசார நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ரஷ்ய அரசின் வைத்திய பல்கலைக்கழக பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் வலாறிடெமின் தெரிவித்தார்.

ரஷ்ய பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் 1990 இல் ஆரம்பிக்கப்பட்டது. 80 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அங்கு படித்து வருகின்றார்கள். (ஐ–எ)

## வெளிநாட்டு மத்தியஸ்தம்: அரசு- விரும்பவில்லையாம்:

கொழும்பு, மார்ச். 20

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்துவதையே அரசு விரும்புகின்றது என்றும் —

பேச்சுக்கு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை அரசு விரும்பவில்லை என்றும் —

அரசின் முக்கிய தலைவர்களில் ஒருவர் [illegible] கொழும்புப் பத்திரிகை ஒன்று [illegible]

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு நடுவராக பிரான்ஸ் நாட்டு ராஜதந்திரி ஒருவரின் பெயரை ஜனாதிபதி எழுத்து மூலம் புலிகளிடம் பிரேரித்ததையும் —

அதனைப் புலிகள் நிராகரித்ததும் தெரிந்தவையே.

வெளிநாட்டு மத்தியஸ்தர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு ஜனாதிபதி சந்திரிகா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பி. பி. ஸி. பேட்டியில் யாழ். ஆயர்

லண்டன், மார்ச் 20

"சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது, இராணுவம் இறுதி முடிவு எடுக்க அனுமதிக்கக் கூடாது. அரசாங்கமேஇறுதி முடிவு எடுக்கக் கூடியதாகஇருக்க வேண்டும்.

"சமாதானப் பேச்சுத் தடைப்பட்டு நிற்பதற்கு அரசாங்கமே பிரதான காரணமாகும்."

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம். சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த பி. பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆனிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஆயர் தமது பேட்டியில் தெரிவித்ததாவது;

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதற்கு பிரதானமாக அரசாங்கமே காரணம்

சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும் தாங்கள் இணக்கம் தெரிவித்த விடயங்களை இயன்றளவு விரைவில் செயற்படுத்த வேண்டும். இனிமேலும் தயக்கம் காட்டாது இணக்கம் தெரிவித்த விடயங்களை அமுல் செய்யவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்வதில் இராணுவம் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

பேச்சுவார்த்தைகளில் இராணுவம் இறுதி முடிவு எடுக்கக்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் கோரிக்கை அரசு நிராகரிப்பு?

### பாலபட்டபென்டி கூறியதாக தகவல்

மணிலா, மார்ச். 20

விடுதலைப் புலிகளின் புதிய கோரிக்கைகளைத் தாம் நிராகரிப்பதாக, அரசாங்கத் தூதுக்குழுவின் தலைவரும், ஜனாதிபதியின் செயலாளருமான திரு. குசும் பாலபட்டபென்டி தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் முக்கியமான எதையும் தமது கடிதத்தில் தெரிவித்து விடவில்லை என்றும் பாலபட்டபென்டி கூறியதாக 'வெரித்தாஸ்' வானொலி தகவல் வெளியிட்டது.

இதே வேளை, தலைவர் பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதம் குறித்து கருத்து வெளியிட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாவது ஈழப்போர் விரைவில் வெடிக்கலாம்!

### பி.பி.ஸி. செய்தியாளர் ஹேஸ்யம்

கொழும்பு, மார்ச். 20

தற்போதுள்ள சூழ்நிலையில் —

''மூன்றாவது ஈழப் போர்'' விரைவில் வெடிக்கக்கூடும்.

— இவ்வாறு பி.பி.ஸியின் சிங்கள சேவை செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

தமது கோரிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சாதகமான பதில் தரவேண்டும் என காலக்கெடு விதித்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதம் குறித்தும், சமாதானப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை குறித்தும் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். [உ–6]

### எம்.பிக்கள் நியமன விவகாரம்:

## ரணிலின் எச்சரிக்கைக்கு பணிந்தனர் ஹமீத், முகமது!

கொழும்பு, மார்ச் 20

ஐ. தே. கவின் தேசியப்பட்டியல் எம்.பி. பதவிக்கு ஏற்பட்டுள்ள இரு வெற்றிடங்களில் ஒன்றுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கட்சித் தலைமையை மிரட்டும் பாணியில் கோரிக்கை விடுத்துவந்த முன்னாள் அமைச்சர் ஏ.ஸி. எஸ். ஹமீத்தும், முன்னாள் சபாநாயகர் எம்.எச். முகம்மதுவும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பதில் எச்சரிக்கைக்குப் பயந்து தமது கோரிக்கையை இறுதி நேரத்தில் கைவிட்டனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

அதனைத் தொடர்ந்து — ரணில் விக்கிரமசிங்காவினால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ரகசியங்களை பொலீஸார் வெளியிட்டால் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 20

இரகசியப்பொலீஸ் திணைக்களம் தொடர்பான தகவல்களை பத்திரிகைகளுக்கு வழங்கும் பொலீஸார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரகசியப்பொலீஸ் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

தகவல்களை பத்திரிகைகளுக்கு வழங்குவதற்கு அதிகாரம் உள்ள அதிகாரிகள் மட்டுமே தொடர்ந்தும் தகவல்களை வெளியிடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தக்கைதிகள் விடுதலை விவகாரத்தில்

# மனிதநேயத்தை சிறிலங்கா அரசு காலடியில் போட்டு மிதித்துள்ளது

## வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் மேற்கொண்ட சிங்கள யுத்தக் கைதிகளின் விடுதலைக்கு அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்காததை கண்டித்து யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்கள யுத்தக் கைதிகள் தங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை கடந்த 1 ஆம் திகதி முதல் மேற்கொண்டிருந்தனர். இவர்களை விடுவிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது மனித நேயத்தை காலடியில் போட்டு மிதித்துள்ளது போலாகும். ஈவு இரக்கமில்லாத ஸ்ரீலங்கா அரசின் இச் செயலானது எதிர் காலத்தில் மனித உரிமைகளை கேள்விக் குறியாக்கவுள்ளது

இந் நிலையில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உண்ணாவிரதத்தின் புனிதத்தன்மையும் மகிமையையும் மதித்து தமிழீழ மண்ணில் அநாவசியமான மரணம் நிகழக் கூடாது என்பதை கவனத்தில் எடுத்து, எதுவித நிபந்தனைகளுமின்றி சாகும் வரையிலான உண்ணாவிரதம் இருந்த யுத்தக் கைதிகளை விடுதலை செய்துள்ளார்.

யுத்தக் கைதிகளை விடுதலை செய்தமைக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

மனித நேயம், மனித உரிமைகள் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசின் கண்கள் இனியாவது திறக்குமா? — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கு

# இவ்வருட நடுப் பகுதியில் புதிய பாடத்திட்டம் அமுல்

கொழும்பு, மார்ச் 20
ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டம் இவ்வருட நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்துசமயம், இந்து நாகரிகம், கிறிஸ்தவம், இஸ்லாமிய நாகரிகம், பௌத்த நாகரிகம் ஆகிய பாடங்கள் தொடர்பாக புதிதாக போதனாசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் உயர்தர வகுப்பில் இந்தப் பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்றப் பட்ட போதனாசிரியர்கள் பயிற்சி அளிப்பர் என்றும் —

எதிர்வரும் மே மாதத்துக்கு முன்னர் பயிற்சி பூர்த்தியானதும் புதிய பாடத் திட்டம் அறிமுகப் படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாய பயிற்சி வகுப்பு

விவசாயத் துறையை மேம்படுத்தும் நோக்கோடு விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக விவசாயப் பயிற்சி வகுப்புகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து நடத்தி வருகின்றது.

இத்தவகையில் —

இன்றைய தினம் காலை 10.00 மணிக்கு புலோலி வல்லிபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் —

பிற்பகல் 3-00 மணிக்கு ஏழாலை மேற்கு மகாவித்தியாலத்திலும் —

நாளை தினம் காலை 10-00 மணிக்கு பளை மாசார் கிராம முன்னேற்றச் சங்கத்திலும் —

23 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு அராலி தெற்கு கறுப்பிட்டி பிள்ளையார் கோவிலடி கோப்பாய் மத்தி மாரியம்மன் கோவிலடி, அம்பன் செம்பியன்பற்று கிராம முன்னேற்ற சங்கம் ஆகிய இடங்களிலும் —

24 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு மாசியம்பிட்டி கண்ணகை அம்மன் கோவிலடி சிறுப்பிட்டி கிழக்கு சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும் —

பிற்பகல் 2-30 மணிக்கு கெருடாவில் பாலர் பாடசாலையிலும் —

28 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு நல்லூர் சனசமூக நிலையம் தெற்பலி ப. நோ. கூ. சங்கம் ஆகிய இடங்களிலும் —

30 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு கைதடி நுணாவில் கதிரொளி சனசமூக நிலையத்திலும் இப் பயிற்சி வகுப்புக்களை நடத்த ஏற்பாடாகியுள்ளது.

இப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சகல விவசாயிகளுக்கும் கிராமிய உற்பத்திக் குழுவினருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். [இ]

## பாடசாலைகளில்

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புனித மிக்கேல் ஆலய முன்றிலில் பாடசாலை அதிபர் திரு கா. இராசகோபாலு தலைமையில் நடைபெறும். [ஐ 14-154]

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தியம்மன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி. ம. சீவரத்தினம் தலைமையில் நடைபெறும். [ஐ-14-117]

★ ★ ★

பூம்புகார் பவானி (நித்திலர்) கல்விக் கூடத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. க சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கிளிநொச்சிவிவசாயபீட விவசாய இரசாயனவியல் துறைத் தலைவர்கலாநிதி சு மோகனதாஸ் கலந்து கொள்வார். (ஐ-14)

# இசையாளர்களிடமிருந்து இந்தமண் புதிய இசை மரபை எதிர்பார்க்கிறது

## நூல் வெளியீட்டு விழாவில் கவிஞர் புதுவை உரை

வலிகாமம் தெற்கு, மார்ச் 20
"இசையைப் பயிலும் இசையாளர்களிடம் இருந்து இந்த மண் ஒரு தேடலை எதிர்பார்த்துள்ளது. இசையினை கற்பதோடு நில்லாமல், இசை பற்றிய ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க வேண்டும். எமது மண்ணுக்கென புதிய வடிவங்களையும் தோற்றங்களையும் இசையாளர்கள் தர வேண்டும்

— இவ்வாறு தெரிவித்தார் கவிஞர் புதுவை இரத்தினதுரை.

மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் நடைபெற்ற "இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து இசை முன்னோடிகள்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கவின்கலை மன்ற தலைவர் எஸ். சிவசிவா தலைமையில் விழா நடைபெற்றது.

இராமநாதன் நுண்கலைக் கழக வாத்தியத்துறை இணைப்பாளர் கலாஜோதி அ நா. சோமாஸ்கந்தசர்மா எழுதிய மேற்படி நூலை கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

வழும் போது செத்து; செத்த பிறகு வாழ்பவனே கலைஞன் எனக் கூறலாம் கலைஞர்கள் இன்று வாழும் போது வாழ்ந்து சாகும் போது சாகும் நிலையே காணப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும்.

கலைஞர்கள் வாழும்போதே அவர்கள் பற்றிய சரியான தரவுகளையும் தகவல்களையும் திரட்டவேண்டும்.

தமிழகத்தில் கலைஞர்கள், வீரசாகசம் புரிந்தவர்களைப் பற்றிய பல தகவல்கள் நூல் உருவில் வெளியாகின்றன. ஈழத்தில் அப்படி ஒரு நிலை இல்லை.

பாக்கு நீரிணையையும் ஆங்கில கால்வாயையும் நீந்திக் கடந்த குற்றாலீஸ்வரனின் வீரத்தை மெச்சி ஏழுபுத்தகங்களை அவர்கள் எழுதியுள்ளார்கள். 35 ஆண்டுகட்கு முன்பே ஈழத்தமிழன் நவரத்தினசாமி பாககுநீரிணையை நீந்திக்கடந்தது பற்றி நாம் ஒரு புத்தகமேனும் வெளியிடவில்லை.

கலைஞர்களும் கூட தம்மை பற்றிய செய்திக்குறிப்புகளை வாழும்போதே எழுதிவைத்துக் கொள்ளவேண்டும்.

கலைஞர்களிடையே ஒரு கூட்டுறவு இந்த மண்ணில் உருவாக வேண்டும்.

தமிழக கலைகளுக்கும் ஈழத்து கலைகளுக்கும் தனித்தனியான பண்பாடுகள் உள்ளன புதிய இசை மரபு ஒன்றை ஆக்கிக் கொள்ள நாம் முனைகிறோம் பிழையைப் பிழை என சுட்டிக் காட்டும் கலைஞர்களும் எழுத்தாளர்களும் இந்த மண்ணில் வாழ்கிறார்கள்.

எமக்கென ஒரு மண், ஒரு பிரதேசம், தனித்துவம், பண்பாடு கேட்டு போராடும் நாம் எமக்கென்று ஒரு இசை மரபை தேட முயல்வதில் என்ன தவறு?

இசையை பயில்பவர்கள் வெறும் சான்றிதழ்களுக்கும் வேலைவாய்ப்புக்குமாக பயிலக்கூடாது. அதற்கு மேலும் ஒரு பணியாக கலையைக் கலையாக கருதி பயில வேண்டும்.

இந்த நூல் எமது கலைஞர்களுக்கு ஒரு ஊக்கு சக்தியாக விளங்கும்

இவ்வாறு புதுவை இரத்தினதுரை மேலும் கூறினார்.

சிறப்புரையாற்றிய திரு. இ. ஜெயராஜ் கூறியதாவது —

ஒரு நல்ல வித்துவான்சமுதாயத்துக்காக வாழ்கிறான். நமது பரம்பரையை நினைக்காத — மதிக்காத எந்த ஒரு கலைஞனும் கலையில் முன்னுக்கு வரமாட்டான்.

கற்றல்-கேட்டலில் இருந்து பலதை தெரிந்து கொள்வதே அறிவு அந்த வகையில் எமது பரம்பரையினரிடம் இருந்து கேட்டு கற்று கலைஞர்கள் தம் அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டும்.

பழமையை போற்றத் தயங்கும் காலமாக இது உள்ளது எமது பாரம்பரியத்தை — பரம்பரையை இழிந்தது என கருதும் மனநிலை மாற வேண்டும். நுண்கலைகளை பற்றிய ஞானம் உள்ளவர்கள் இந்த நாட்டிலே அரிதாகவே உள்ளனர். நுண்கலைகளைப் பற்றி அறியாதவர்கள் அது பற்றி பேசி நுண்கலையை கொச்சைப்படுத்தக் கூடாது — என்றார்.

கலாநிதி சபா. ஜெயராசா, பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

திரு. நா. வி. மு. நவரத்தினம் அறிமுக உரையையும் —

இயலிசைவாரிதி என். வீரமணிஐயர் மதிப்புரையும் நிகழ்த்தினர்.

பிரம்மஸ்ரீ ... சர்மாவின் ... விழாவில் இட... (ஐ-152)

## திருமுறை விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள்

இணுவில் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில், இளம் தொண்டர் சபையினரால் நடத்தப்படும் திருமுறைப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சி நாளை செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணிக்கு யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறை தலைவர் கலாநிதி சபா. ஜெயராசா தலைமையில் ஆரம்பமாகும்.

குருமகா சந்நிதானம் மெய்கண்டார் ஆதீனம் சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக் குருக்கள், சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், சிவஸ்ரீ வை. சோமசுந்தரக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரையும் —

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கத்தின் வாழ்த்துரையும் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் —

பண்ணிசை, ஆய்வுரை, கெஞ்சிற் கச்சேரி, இளந்தொண்டர் சபையினரின் பக்தநந்தனார்-இசை நாடகமும் விழாவில் இடம்பெறும்.

பலாலி ஆசிரிய கலாசாலை உப அதிபர் கவிஞர். சோ. பத்மநாதன் விழா நிறைவுரை நிகழ்த்துவார். (ஐ-14-152-30)

# செல்வா நினைவாலய சுற்றாடல் துப்புரவு

யாழ்ப்பாணம், மார்ச் 20
தந்தை செல்வா நினைவாலயப் பகுதி இப்போது துப்புரவு செய்யப்பட்டு வருகிறது. அங்கு வளர்ந்திருந்த பற்றைகளை வெட்டியும் மெலிஞ்சி முட்புதர்களை செதுக்கியும் கடந்த சிலநாட்களாக யாழ். மாநகரசபை பணியாட்கள் துப்புரவு வேலைகளை வேகமாகச் செய்து வருகிறார்கள்.

தந்தை செல்வாவின் 97 ஆவது பிறந்த தினம் இம்மாதம் முப்பதாம் திகதியாகும்.

அன்றைய தினம் மக்கள் நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்துவது வழக்கம். அதனையொட்டியே நினைவாலயச் சுற்றுப்புறம் துப்புரவு செய்யப்படுகிறது.

இதே வேளை தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு 31 ஆம் திகதியன்று காலை 9 மணிக்கு நினைவாலயத்தில் மலரஞ்சலி வைபவத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அன்று மாலை 4.30 மணிக்கு சுண்டிக்குளி புனிதர் யோவான்ஸ்நானகன்' தேவாலயத்தில், தந்தைசெல்வாவின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் சிறப்பு ஆராதனை நடைபெறும்.

யாழ். ஐக்கியகிறிஸ்தவ சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ் வாராதனை நிகழ்வில், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அதிவண .டி .ஜே. அம்பலவாணர் அருளுரை வழங்குவார்.

அருட் கலாநிதி ஏ ஜே வி. சந்திரகாந்தன் தந்தை செல்வாவின் வாழ்விற்கு சாட்சி பகருவார். (அ-7)

## ஆலயங்களில்

மருதனார்மடம் பல்லப்ப வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தில் இன்று திங்கட்கிழமை சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெறும். [எ]

★ ★ ★

நல்லூர் ஸ்ரீதேவி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் முதலாவது பங்குனித் திங்கள் உற்சவம் இன்று நடைபெறும். [ஐ-14]

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேச்சியம்மன் ஆலயத்தில் இன்று பங்குனித் திங்கள் உற்சவத்தையொட்டி பூசைகளும் பொங்கலும் இடம்பெறும். [ஐ-14-154]

## இசை விழாவில் நாளை

வலி.மேற்கு பிரதேச கலாசார பேரவை நடத்தும் ஐந்து நாள் இசைவிழாவின், 3 ஆம் நாள் விழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு திரு. கி நடராசா குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

வலி.மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும் நாளைய நிகழ்வுகளில் இன்னிசைக் கச்சேரி, கெஞ்சிறக்கச்சேரி, நாடகம் என்பனவும் இடம்பெறும். [உ-5-175]

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி, மார்ச் 20
தென்மராட்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று 20ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3-00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். [ஐ-117]

★ ★ ★

கோப்பாய் பிரிவு பிரதேச செயலகங்களின் — பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வு இன்று மாலை 4 மணி முதல் வீனஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதும்.

★ ★ ★

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் — நொக்கவுட் ரீதியிலான — 9பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும். இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி:- சென் அன்ரனிஸ் "பி" எதிர் அரியாலை ஐ. வி. க.

★ மாலை 4.30 மணி:- அறிவொளி எதிர் பாடும் மீன் 'பி' [உ]

## தமிழ் எம்.பிமார் ஒன்றிய கருத்தரங்கு

தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் காலை 10 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும்.

கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம் "அடிப்படை மனித உரிமைகள்" என்ற தலைப்பிலும் —

இ. தொ. காவின் எம். பியான பி. பி. தேவராஜ் "தேர்தல் அமைப்பு முறை" என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்.

ஒன்றியத்தின் இணைச் செயலாளரும் பிரதி அமைச்சருமான பி. சந்திரசேகரன் இத் தகவலை தெரிவித்தார்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக

# முன்னாள் கொமாண்டோ பொலீஸாரால் தேடுதல்!

கொழும்பு, மார்ச் 20
கடந்த வாரம் நாகொடையில் உள்ள பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பாக பொலீஸார் முன்னாள் பொலீஸ் கொமாண்டோ ஒருவரை தேடிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற அச் சம்பவத்தில் 4லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டது மூன்று பேர் கொண்ட ஆயுதக்குழு ஒன்றே இக்கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-எ)

# போராட்டம் மூலம் எமது பெண்களின் ஆளுமை வெளிப்பட்டுள்ளது

## மகளிர் தினக் கூட்டத்தில் தணிகைச்செல்வி உரை

வலிகாமம் தெற்கு, மார்ச் 20
கடந்த காலங்களில் நிலவி வந்த சமுதாய அழுத்தங்களினால் பெண்ணினத்தின் வீரச் செயல்கள் மழுங்கடிக்கப்பட்டன ஆனால் இன்று பெண்கள் மீதான சமுதாய அழுத்தங்கள் மாற்றமடைந்து வருகின்றன. பெண்கள் தமது ஆற்றல்களையும். ஆளுமையையும், வீரச்செயலகளையும் தேசவிடுதலைப் போராட்டத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதோடு தமது நிலையையும் உயர்த்தி உள்ளனர்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

பெண்களால் என்ன செய்ய முடியும். அவர்கள் மென்மையானவர்கள் என்று கருதப் பட்டது ஒரு காலத்தில். ஆனால் இன்று அந்நிலை மாறியுள்ளது. ஆண்களுக்கு நிகராக சகல துறைகளிலும் பெண்கள் செயற்பட முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பெண்களால் முடியாதது என்ன? என்ற கேள்வியே இன்று தொக்கி நிற்கின்றது — என்றார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் உரையாற்றுகையில் கூறியதாவது —

மதம், சாதி ஆகிய கோட்பாடுகளை முன் வைத்து சில தேசங்களில் பெண்கள் ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். அந்த அடக்கு முறைகள் - ஒடுக்கு முறைகளில் இருந்து விடுதலை பெறுவதற்காகவே இன்று பெண்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

தேசத்தின் விடுதலையுடன் கூடிய சமூக விடுதலையே பெண் விடுதலையாகும் சமத்துவம் — சமதர்மம் என்ற கோட்பாட்டில் ஆண்—பெண் இருவரும் சமபங்கு பெற்று திகழவேண்டும்.

எமது தமிழீழ விடுதலைப் போராட்டமானது உலகளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்று சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு காரணம் போராட்டத்தில் இணைந்து செயல்படும் பெண்களின் பங்களிப்பே ஆகும் — என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் அரசியல் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த திரு. மனோகரன் உட்பட பலர் கூட்டத்தில் உரையாற்றினர். (ஐ-152)

# சமூகப் பணியாளர் ஆர்.ரி. சிறந்த எழுத்தாளர்

## நினைவு நூல் வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 20
"கல்விப்பணி, சமயப்பணி, சமூகப்பணி செய்வதில் முன்னின்று உழைத்தவர் ஆசிரியமணி ஆர். ரி சுப்பிரமணியம். இவர் எழுதிய கட்டுரைகள் நகைச்சுவையோடு கூடியவை. அதே நேரத்தில் பொருள் பொதிந்தனவாகவும் இருப்பன. அவருடைய பேச்சும் சபையோரைச் சிரிக்க வைப்பதுடன் சிந்திகக்வும் வைப்பது அவர் செய்த சேவைப்பாராட்டும் முகமாக அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளுடன், அன்னவர் எழுதியய கட்டுரைகளையும் ஒன்றிணைத்து நூல்வடிவில் வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது"

ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் நினைவு தின விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

... அமைந்துள்ள ஆர். ரி. அவர் ... பெற்ற இவ் விழாவில் கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோயில் பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ கு. சோமசுந்தரக் குருக்கள் முதலில் ஆசியுரை வழங்கினார்.

"ஆசிரியமணி மலர்" என்னும் நூலை வெளியிட்டுப் பேசிய மூத்த எழுத்தாளர் செல்லப்பா நடராசா, ஆசிரியமணி ஆர். ரி இன் ஏனைய கட்டுரைகளும் நூல் வடிவம் பெறவேண்டும்—என்றார்.

நூலின் முதற் பிரதியை கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோயில் அறங்காவலர் திரு வாரித்தம்பி கதிரேசு பெற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் சமாதான நீதிபதி அ. ஆறுமுகம், வித்துவான் வே. ஆறுமுகன். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னைநாள் காரியதரிசி க இ. குமாரசாமி, ஓய்வு பெற்ற அதிபர் ச. முத்தையா ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து கவிஞர் கல்வயல் வே குமாரசாமியின் கவிதை அஞ்சலி இடம் பெற்றது. [க]

## 1ம் -ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இராமு சயம்பு

நெஞ்சினிக்க மண்ணில் 18-6-1918
நினைவிழந்து விண்ணில் 30-3-1994

திதி. 20-3-1995

ஆண்டு ஒன்று அகன்றாலும் உங்கள் அன்பு எம்மை விட்டகலாது உங்கள் ஆசிகளும் அறிவுரைகளும் என்றும் எம்மை வழிநடத்திக் கொண்டிருக்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,
மகன் குடும்பம்,
பெறாமக்கள், சுற்றத்தார்,

அரியாலை. [35804]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 16 — 07 — 1958



இறைவன் அடியில்: 20 — 03 — 1993

அமரர்
சிவபாலசிங்கம் சுகுணஜீவன்

திதி: 28 — 3 — 1995

அன்பு மகனே ஜீவா! நீ நீங்காத நினைவுகளை ஏற்படுத்தி விட்டு, மறைந்து இரண்டாண்டுகள் ஓடி மறைந்து விட்டன. எங்கள் குடும்பத்தின் காவல் தெய்வமே என்றென்றும் எங்கள் இதயத்தில் வீற்றிருப்பாய், உன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்.

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
மச்சான், மச்சாள்மார்,
பெறாமக்கள், மருமக்கள்.

அறிவகம்,
உடுவில் கிழக்கு.

(35729)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட

# முஸ்லிம்களை குடியமர்த்தாவிடின் பதவியை ராஜினாமாச் செய்வேன்

## பிரதி அமைச்சர் கங்கணம்

கொழும்பு, மார்ச் 20

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை ஒரு வருடத்தில் மீளக் குடியேற்றாவிட்டால் ராஜினாமாச் செய்வேன்.

விஞ்ஞான தொழில்நுட்பத் துறை பிரதி அமைச்சர் அல்ஹாஜ் எஸ். எஸ். எம். அபூபக்கர் முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கப்பல் துறை, துறைமுகங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலின் போது இவ்வாறான வாக்குறுதியை நான் அளித்தேன்.

சமதானம்ஏற்பட்டால் முஸ்லிம்கள் சொந்த மண்ணில் குடியேற்றப்படுவார்கள் என்றும் இல்லையேல்—ஒரு வருட காலத்துக்குள் அரச காணிகளில் அவர்களை குடியேற்றுவோம் என்றும் நான் கூறியிருந்தேன் – என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

### தமிழக சிறுமி சாதனை!

தமிழ்நாடு திருப்பூர் பகுதியைச் சேர்ந்த — 10 வயதுடைய — ஜே. சுசுந்தி என்ற ஐந்தாம் வகுப்பு மாணவி 900 கிலோ எடை கொண்ட 'மாருதி' கார் ஒன்றை தனது தலைமுடியினால் இழுத்து சாதனை புரிந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது. [உ]

## குருநகர் மீனவர்கள் மூவர் கடற்படையால் கைது?

### செஞ்சிலுவையிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த புதன்கிழமை நெடுந்தீவு கடற்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற குருநகர் மீனவர்கள் மூவர் காணாமற் போயிருப்பதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் முறையிடப் பட்டிருக்கிறது.

ஸ்ரீலங்கா கடற்படையினர் இவர்களைப் பிடித்துச் சென்றிருக்கலாம் எனத் சந்தேகிக்கப்படுகின்றது.

ஆசிர்வாதம் அன்ரனி பிரான்ஸிஸ் (33 வயது), அந்தோனிப்பிள்ளை ஜோட்கென்னடி [29 வயது], குமாரசாமி உதயபாலன் [27 வயது] ஆகிய குருநகர் மீனவர்களே காணாமல் போயுள்ளனர்.

வடக்குக் கடலில் மீனவர்களை தொடர்ந்து கடற்படையினர் தாக்கி கெடுபிடிகளுக்கு உள்ளாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. [உ]

அ. தி. மு. கவிலிருந்து விலகிய

## முன்னாள் அமைச்சர்கள் கோபாலசாமி அணியில்

சென்னை, மார்ச் 20

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தும் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அமைச்சரவையிலிருந்தும் கடந்த ஆண்டு நீக்கப்பட்ட ஜி விசுவநாதன், அழகு திருநாவுக்கரசு ஆகிய இருவரும், வை. கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இம்மாத முற்பகுதியில்இணைந்து கொண்டனர்.

அ. தி மு. கவிலிருந்து நீக்கப்பட்ட இவர்கள் சட்டப் பேரவையில் எந்தக் கட்சியையும் சாராதவர்களாக இது வரை இருந்து வந்தனர்.

தற்போது ம. தி. மு. கவில் இவர்கள் சேர்ந்ததை அடுத்து கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது எனக் கோரி, தமிழக சட்டப் பேரவை ஆளுநர் சேடப்பட்டி முத்தையா மேற்படி இருவருக்கும் நோட்டிடீஸ் அனுப்பியிருக்கிறார். [உ]

## வலைப்பந்தாட்ட போட்டிகள்

தென்மராட்சி, மார்ச் 20

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சாவகச்சேரி வட்டப் பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது, 19 வயது பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் இன்று 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெறும். (ஐ-5-117)

## புலிகளின் குரல் வானொலியில்

20 — 03 — 1995

திங்கள் இரவு

- ★ 8-02 — தளிர்கள்—சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — புதினம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்— மணற்காடு சம்மாட்டியார் திரு. சந்திரேஸ் வேதநாயகத்துடனான செவ்வி

21 — 03 — 1995

செவ்வாய் காலை

- ★ 7-02— மாவீரவணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள் என்பன இடம் பெறும்.

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5 02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 —நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு
- ★ 6-30 — மாலைநிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## அடுத்தகட்ட பேச்சுக்கு அரசு முயற்சியாம்

விடுதலைப் புலிகளுடன் அடுத்த சுற்றுசமாதானப்பேச்சுக்களை நடத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம்மேற்கொண்டுள்ளது.

நீதி அரசமைப்பு விவகார வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜீ எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக்கரைப் பற்றில் புதிதாக அமைக்கப் பட்ட நீதி மன்றக் கட்டடத்தொகுதியை திறந்து வைத்தபின் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார். (ஐ-4)

## அரசின் தீர்வுத் திட்டம் அடுத்த வாரம்

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தான் தயாரித்துள்ள யோசனைத் திட்டத்தை அடுத்த வாரமளவில் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளதாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்புத் தெரிவித்துள்ளது.

''புலிகளின் குரல்'' வானொலி இத்தகவலை வெளியிட்டது. [உ]

## பாதிக்கப்பட்ட மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

### புனர் வாழ்வுக்கழகம் வழங்கியது

தென்மராட்சி, மார்ச் 20

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பளைப் பிரிவினர் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து இப்பகுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

முதற் கட்டமாக பளை அரசன் நகர் முகமாலை சமுத்திரன் குடியிருப்பு, கணபதிப் பிள்ளை குடியிருப்பு செற்பலி பண்டிதர் குடியிருப்பு ஆகிய இடங்களில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அடுத்த கட்டமாக ஏனைய இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள மாணவர்களுக்கும் உறவினர்கள் நண்பர்களுடன் தங்கியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு:

## காயமடைந்து தேறிவரும் மக்களிடம் விசாரணை

கொழும்பு, மார்ச் 20

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் காயமடைந்து தேறி வருபவர்களை பயன்படுத்தி அக் குண்டு வெடிப்பு தொடர்பான துப்புக்களைப் பெறுவதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளர்.

இக்குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த பலர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று தேறி வருவதால்—

அவர்களை இரகசியப் பொலீஸார் தற்சமயம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவர்களிடம் இருந்து புதிய பல தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அதை அடுத்து குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் திரு. காமினி திஸாநாயக்க உட்பட பலர் உயிரிழந்தது தெரிந்ததே. [ஓ-3]

ஸிசில் வைத்தியரத்னாவின் ஊழல் விவகாரம்

## பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றைச் சேர்ந்த அதிகாரிகளிடமும் வாக்கு மூலம்

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிசில் வைத்திய ரத்னா மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து, பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றின் அதிகாரிகளிடமிருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்வதற்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி. வி. சுமணசேகரா கடந்த வாரம் லண்டன் சென்றார்.

இது விஷயத்தில் இவருக்கு ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார் உதவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

''றிகோன்க்ப் லிமிட்டெட்' என்ற பிரிட்டிஷ் நிறுவனம் சட்டவிரோத ஒலிபரப்புகளைக் கண்டுபிடிக்கும் சக்தி வாய்ந்த தொடர்பு சாதனம் ஒன்றை, சிசில் வைத்திரத்னா தளபதியாகவிருந்த காலத்தில் இலங்கை இராணுவத்திற்கு விற்ற விவகாரத்தில் இடம் பெற்ற மோசடி குறித்தே இவ் விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

## வலிகாமம் மேற்கு பிரதேச கலாச்சார பேரவையினரின்

# மாபெரும் இசைவிழா

மகாகணபதி பிள்ளையார் கோயில் வீதி
சித்தன்கேணி.

**2 ஆம் நாள் 20 - 03 - 1995 திங்கட்கிழமை**

அராலி வடக்கு, அராலி தெற்கு, அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி மத்தி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் ஆதரவில்

மாலை

**5-00 — 6-00** மங்கள இசை
திரு. இ. சிவகுமார் குழுவினர்

**6-00 — 6-30** வீணை இசை
செல்வி பரமசிவம் இரஞ்சினிதேவி குழுவினர்

**6-30 — 7-15** பாட்டு
சங்கீத பூஷணம்
திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
(ஆசிரியை வட்டு. இந்துக் கல்லூரி)

**7-15 — 8-00** மங்கல விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி சி. நாகரத்தினம்
திரு. விசுவலிங்கம் செல்வரத்தினம்

★ வரவேற்புரை
திருமதி பொ. சிவானந்தம்
(கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)

★ தலைமையுரை
திரு. கா. சந்திரராசா
(பிரதேச செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர்)

★ பிரதம விருந்தினர்
அராலியூர் நா. சுந்தரம்பிள்ளை
(இலங்கை வானொலி நாடக ஆசிரியர்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. க. நாராயணசிங்கம்
(உரிமையாளர், நித்யசித்ரா)
திரு. வி. சிவஞானபோதன்
(அதிபர் வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை)

★ நன்றியுரை
திரு சி. சிங்கராசா
(கிராம உத்தியோகத்தர்)

**8-00 — 9-00** பாட்டு
சங்கீதபூஷணம்
திரு. எஸ். குமாரசாமி — பாட்டு
திரு ஆர். எஸ். கேசவமூர்த்தி — வயலின்
திரு கே. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. எஸ். கரிதரன் — கஞ்சிரா

**9-00 — 10-00** நடனம்
திருமதி ஞானமணி செல்லையா அவர்களின் மாணவி
அராலியூர்
செல்வி கணபதிப்பிள்ளை தமிழ்ச்செல்வி

● இசைப் பிரியர்களையும், அன்பர்களையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— கலாச்சாரப் பேரவையினர்.

வாழ்த்துவோர்;
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
லிங்கம் ஸ்ரோர்ஸ்
வல்லை வீதி, சங்கானை கிழக்கு, சங்கானை.
[சி-796]

# தாவரப் புரதச் சத்து நிறைந்துள்ள சிப்பிக் காளான் வளர்ப்பது எப்படி?

காளான் எனப்படுவது உயிருள்ளமற்றும் இறந்த சேதனப் பொருள்களில் வளரும் ஒருவகை பூஞ்சணத்திலிருந்து தோன்றுகின்ற பூஞ்சண வித்திகளை அதிக எண்ணிக்கையில் உருவாக்கி பரவச்செய்யும் கனியுடலம் எனும் ஓர் அமைப்பு ஆகும்.

ஏனைய பூஞ்சணங்களைப் போல் காளான் பூஞ்சணமும் ''பச்சையுணவுமணி'' அற்றுக் காணப்படுவதனால் இவை தமக்குத் தேவையான கனியுப்பு, நீர் போன்றவற்றை உயிருள்ள மற்றும் இறந்த சேதனப் பொருள்களிலிருந்து பெற்றுக் கொள்கின்றன. சிப்பிக் காளானில் இக் கனியுடலமானது கடற்சிப்பியின் தோற்றத்தைக் கொண்டிருக்கும். தலைப்பாகத்தின் ஒரு பக்கத்தில் இணைக்கப்பட்டிருக்கும்.

### படுக்கை தயாரித்தல்

தேவையான பொருள்கள்:

1. காளான் வித்து: 200 கிராம் கொண்ட 1 புட்டி இரண்டு படுக்கைகளுக்குப் போதுமானது.

2. ஊடகம்: வைக்கோல், சோளக்கதிர்சக்கைகோது, சோளத்தட்டை, கம்புத் தட்டை, நிலக்கடலைக் கோது, வாழையிலைச் சருகு என்பன போன்ற வீட்டினதும் வயல்களினதும் கழிவுப் பொருள்கள்.

3. வெள்ளைப் பொலித்தீன் பை அல்லது ''சொப்பிங் பை''

பொலித்தீன் பை 60 செ. மீ உயரமும் 30 செ. மீ அகலமும் கொண்டது. கனமாக இருப்பதை விட மெல்லியதாக இருத்தல் (100 காஜ்) சிறந்தது. பையினடிப்பாகத்தை நூலினால் முடித்து வைக்கவும். பையின் நடுவில் ஒரு பக்கத்திற்கு ஒரு துவாரம் வீதம் ஒரு செ. மீ அளவுள்ள துவாரங்கள் ஒரு பைக்கு இரண்டு வீதம் போட்டுக் கொள்ளவும்.

### தயாரிக்கும் முறை

ஊடகப் பொருளைப் பதப்படுத்தல்:

சுத்தமான நனையாத காய்ந்த வைக்கோலையோ வேறு கழிவுப் பொருள்களையோ சுமார் 3– 5 செ மீ நீளத்தில் (வைக்கோலாயின்) சிறுதுண்டுகளாக (ஏனையவற்றை) வெட்டிக் கொள்ளவும். தண்ணீரில் 3முதல் 5 மணிநேரம் ஊறவைக்கவும். பின்பு வெளியில் எடுத்து 30 நிமிடங்களுக்கு கொதி நீரில் அவிக்கவும். நீரை வடித்துவிட்டு சுத்தமான சாக்குப் படுதாவில் பரப்பி [சுமார் 1 மணி நேரம்] உலர

## நீரிழிவுக்கும், இரத்த அழுத்தத்துக்கும் இயற்கை தரும் மிகச் சிறந்த உணவு

வைக்கவும். வைக்கோல் அதிக ஈரத்துடனும் இல்லாமலும் காய்ந்து விடாமலும் இருக்க வேண்டும். வித்து இடுவதற்கான மேடையை உருளை வடிவிலும் தட்டு வடிவிலும் அமைக்கலாம்.

அ) உருளை வடிவிலமைப்பதற்கு 60 செ. மீ உயரமும், 30 செ. மீ அகலமும் கொண்ட பொலித்தீன் பையில் ஒரு முனையை நூலினால் முடித்து வைப்பதன் மூலம் உருவாக்கலாம். பொலித்தீன் பை இல்லாதவிடத்து பெரியளவிலான ''சொப்பிங் பை''யினை உபயோகிக்கலாம் பையின் நடுவில் இருபுறமும் 1 செ. மீ அளவிலான துளை ஒன்று போட்டுக் கொள்ள வேண்டும்

பின்னர் பையினடியில் வைக்கோல் மற்றும் பிற ஊடகப் பொருளை சுமார் 3 செ. மீ. உயரத்திற்கு பரப்பவும் காளான் வித்துக்களை 4 சமபங்காகப் பிரித்து போடப்பட்ட ஊடகப் பொருளின் மேல் ஒரு பங்கை தூவவும்.

இரண்டாவது தடவையாக ஊடகப் பொருளை சுமார் 10 செ. மீ. உயரத்திற்கு பரவவும். அதன் மேல் காளான் வித்துக்களின் மற்றொரு பங்கினைத் தூவவும் மூன்றாவது தடவையாக மீண்டும் சுமார் 10 செ. மீ உயரத்திற்கு ஊடகப் பொருளை பரவவும். இப்படியாக அடுக்கு முறையில் காளான் வித்துக்களை தூவி இறுதியாக பையினது நுனிப் பாகத்தை நூலினால் முடித்து விடவும்.

(ஆ) தட்டுவடிவிலமைப்பதற்கு.

தொற்று நீக்கப்பட்ட அலுமினியத்தட்டுகளிலோ பிளாஸ்ரிக் தட்டுக்களிலோ மேலே கூறப்பட்டவாறு பதப்படுத்தப்பட்ட ஊடகப் பொருளை பரவி அதன்மேல் நடுவில் 1 செ. மீ. துளை போடப்பட்ட பொலித்தீன் பையினால் மூடிக் கட்டுதல் வேண்டும்

இப்படியாக தயாரிக்கப் பட்ட படுக்கைகளை வித்து பரவும், அறைக்கு மாற்றுதல் வேண்டும். இந்த அறையில் வெப்பநிலை 25 சி - 35சிக்கு இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். 25 சி ஐவிடகுறையவோ 35சி ஐ விடக்கூடவோ கூடாது இந்த அறையில் வெளிச்சமோ காற்றோ தேவையில்லை.

தொடர்ந்து 18-20 நாட்களுக்கு படுக்கைகளை வைத்திருத்தல் காளான் வித்திலிருந்து பூஞ்சணம் வளர்ந்து ஊடகம் [illegible] வெள்ளை நிறமாகத்தெரியும். அதன் பின்னர் [illegible] படுக்கைகளினின்றும் அகற்றி காளான் தோற்றுவதற்கான அறைக்கு மாற்றுதல் வேண்டும் காளான் தோற்றுவதற்கான அறை அல்லது காளான் குடிலில்இல் காற்றும் வெளிச்சமும் அவசியம். அத்துடன் வெப்பநிலை 25சி— 30 சிக்குள் இருந்தால் வளரும் காளானின் அளவும் பருப்னும் அதிகமானதாகக் காணமபடும்.

இதற்காக காளான் குடிவானது கிடுகினால் வேயப் பட்டு நாற்புறமும் 2 அடி உயரமும் கொண்ட மண் சுவரினுள் அரை அடிக்கு மணல் பரப்பப்பட்டும் நாற்புறமும் உள்ள கிடுகு தட்டிகளினுட் புறத்தில் சாக்குகளைத் தொங்க விட்டு சாக்கினையும் மணலையும் நனைப்பதன் மூலம் வெளி வெப்பநிலையிலிருந்து 5 சி— 6சி வரையில் குடிலில் உட்புறத்தில் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

### நீர் தெளித்தல்

படுக்கைகளை காளான் தோற்றுவதற்கான அறைக்கு மாற்றி இரண்டாம் நாளே மேடைக்கு நீர் தெளிக்க வேண்டும் காலையும், மாலையும் 20- 30 நிமிடங்கள் யன்னல்களைத் திறந்து வைத்து ஒளியும், காற்றும் அறையினுட் புகவிடல் வேண்டும்.

### காளான் தோன்றுதல்

காளான் வித்திட்ட நாளிலிருந்து சுமார் 18 முதல் 2[illegible] நாட்களில் [illegible] இருக்கும் [illegible] றும். மொட்டுக்கள் தோன்றியதிலிருந்து 3 நாட்களுக்குள் காளான்கள் நன்கு வளர்ந்து விடும். வளர்ந்த காளான்களைத் தண்ணீர் தெளிக்குமுன்னால் அறுவடை செய்ய வேண்டும். வளர்ந்திருக்கும் காளான்களின் மேல் நீர் பட்டால் காளானில் பற்றீரியா தாக்கமேற்பட்டு மஞ்சள் நிறமாக மாறிவிடும்.

காளான் அறுவடை செய்தவுடன் படுக்கையில் வெளிப்புறத்திலிருந்து சுமார் அரை செ. மீ. அளவில் சுரண்டி எடுத்துவிட வேண்டும் தொடர்ந்து தண்ணீர் தெளித்து வர வேண்டும். 7 முதல் 10 நாட்கள் இடைவெளியில் 3 அல்லது 4 முறைகள் காளான் தோன்றும்.

சிப்பிக் காளாலினது (பிளிரோட்டஸ் சஜோர் — கஜு) உற்பத்தித்திறன் 40%— 90% ஆகும். இதன் மூலம் அண்ணளவாக 500 கிராம் காளானைப் பெறக்கூடியதாக இருக்கும்.

காளானில் 3% புரதம் காணப்படுகின்றது. இதில் மாச்சத்தும், கொழுப்புச் சத்தும் மிகக்குறைவாகக் காணப்படுவதினால் நீரிழிவு நோயாளர்களுக்கும் இரத்த அழுத்த நோயுள்ளவர்களுக்கும் சிறந்த உணவாகும். சோயாஇறைச்சி போல காளானும் ஓர் தாவரப் புரதம் கொண்ட உணவே.

வீட்டிலும். வயல்களிலும் கிடைக்கும் கழிவுப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு காளான் வளர்ப்பு செயற்படுத்தப்படுவதினால் இதில் ஏற்படும். செலவும் மிகக் குறைவு. அத்துடன் காளான் வளர்ப்பிற்கும் எந்த விதமான செய்கை பண்ணும் நிலப்பரப்போ பசளைகளோ மற்றும் பூச்சிநாசினிகளோ தேவையில்லை

[தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

7 துண்டு சோபா குசன் செற்றி, அலுமாரி சோக் கேஸ், சாப்பாட்டு மேசை, கதிரை, பின்னல் செற்றி, டிரெஸிங் ரேபிள், சந்தோர் மேசை, புத்தக றாக்கை, இரும்பு ஸ்ருல், கடை றாக்கை [8x8] மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி. திருநெல்வேலி. [35786]

கொடிகாமம் கச்சாய் வீதியில் வீட்டுடன், 14½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு: சமலாதேவி அருணன், கச்சாய் வீதி [கிராம அலுவலகத்திற்கு முன்], கொடிகாமம். [35778]

''கல்வி பற்றிச் சிந்திப்போம், செயற்படுவோம்'' அதிபர்களுக்கோர் அகல் விளக்கு, பெற்றோர்களுக்கோர் கலங்கரை விளக்கு. விலை 25/- எழுதியவர் அ. பொ. செல்லையா [35777]

### காயத்திரி வெளியீடுகள்

ஆண்டு 6, 7, 8 9. 10. 11 க்கான வே. நவமோகனின் இலகு தமிழ் இலக்கணம் (திருத்திய பதிப்பு) ரூபா 25/- மாற்றம் - முத்திங்கள் சஞ்சிகை ரூபா 15/- எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். [35783]

### தேவை

எமது நூல் வெளியீடுகளை விற்பனை செய்ய விநியோகஸ்தர் தேவை. கமிஷன் வழங்கப்படும். தொடர்பு: காலை 6-00 — 10-00 மணி மாற்றம் சஞ்சிகை, சட்டநாதர் வீதி, நல்லூர். (35782)

### புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பொது உளச்சாரபு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில்/ பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8357)

### FOR SALE

Honda Motor Cycle) Ladies model (Automatic, Contact. New No. 608, K. K. S. Road, Jaffna. [35774]

### சீயாக்காய்ப் பவுடர்

எந்தவிதமான இரசாயன பொருள்களும் சேர்க்கப்படாமல் ஆறு வகை இயற்கை பொருள்கள் சேர்த்து தயாரிக்கப்பட்டதுதான் காவேரி சீயாக்காய் பவுடர், கண் குளிர்மை, கூந்தல் வளர்ச்சிக்கு காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கி பாவியுங்கள். (35708)

### புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்கான பொது அறிவு, மொழித் திறன் வெளிவந்து விட்டது. 60/- மட்டுமே. சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-619)

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி [சி-396]

### பயிற்சி வினாத்தாள்கள்


முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ் Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன எல்லா பிரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (8390)

### கனடா நாடகப் பரிசு

கனடா, ரொறன்ரோ ஆசிய வானொலி நிலையத்தின் தமிழ்ப் பிரிவு நடத்திய நாடகப் போட்டியின் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' பூபாலசிங்கம், புத்தகசாலை. [35611]

---

## "மகரயாழ்" விருது பெற்ற டாக்டருக்கு வாழ்த்து!



**டாக்டர். து. வி. ஜெயகுலராஜா**

மகத்தான சேவைக்கு
மகரயாழ் விருது!
மனித நேயம் பேணும்
மன்னனுக்கு வாழ்த்து!

சிவகணேசன் பட்டுச் சோலை,
ராம் பட்டுச் சோலை.
[சி-806]

---

## அகில இலங்கை கம்பன் கழகத்தின் 1995ஆம் ஆண்டிற்கான மகரயாழ் விருது பெறும்

வைத்திய கலாநிதி
**து. வி. ஜெயகுலராஜா**
அவர்களுக்கு

எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

யாழ். பரியோவான்
பழைய மாணவர் சங்கம்.
யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.
(35787)

---

## அறிவித்தல்

### மெடி குவிக் ஆய்வுகூடம்

இரசாயனப் பொருள்கள் கொள்வனவின் பின் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளேன் என்பதையும், இன்று முதல் யாழ்ப்பாணம் - சுன்னாகம் தனியார் மருத்துவ மனை ஆய்வுகூடப் பகுதிகள் இயங்கும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

அ. சுந்தரலிங்கம் (M L T)
(உரிமையாளர்)
[35792]

---

சிவமயம்

திருநெல்வேலி - கிழக்கு ஆடியபாத வீதி
அருள்மிகு
## சிவஞானப்பிள்ளையார் கோயில்
வருடாந்த அலங்கார உற்சவ கால
## தெய்வீக இலக்கியப் பேருரை

பொருள்: **மகாபாரதம்**

நிகழ்த்துபவர்: தமிழருவி த சிவகுமாரன் [அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம், ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி]

காலம்: 20 - 03 - 1995 திங்கள் முதல்
29 - 03 - 1995 புதன் வரை
நேரம்: இரவு 7 15 — 8.15 வரை

மேலும் காலை 9 மணிக்கு அபிஷேகமும், வசந்த மண்டப பூஜை மாலை 6 மணிக்கு நிகழும்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

இங்ஙனம்:
க. சபாபதி,
தேவஸ்தான தர்மகர்த்தா
[65791]

---

உ

இணுவையம் பதியில்
## திருமுறைப் பெருவிழா

### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்
### 20 – 03 – 1995 திங்கட்கிழமை

★ தலைவர்
திரு. ஆறு. திருமுருகன் B. A.

மாலை

**4 00** மணி: மங்கள இசை

**5-00** மணி: பண்ணிசை
இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்
சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள்

**5-20** மணி: பண்ணிசை அரங்கு
பாட்டு — திரு. R. திருஞானசம்பந்தன்
வயலின் — பிரம்மஸ்ரீ S. வெங்கடேஸ்வர சர்மா
மிருதங்கம் — திரு. க. கஜன்

**5-50** மணி: மங்கள விளக்கேற்றல்
திரு நா. சுந்தரலிங்கம் (சாந்தி புடைவையகம்)
திரு. க. அம்பலவாணர் (ஓய்வு பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்)

**6-00** மணி: வரவேற்புரை
செல்வன் தி. திருப்பதிநாதன்

**6 10** மணி: தலைமையுரை

**6-25** மணி: ஆசியுரை
சிவஸ்ரீ ந உருத்திரமூர்த்திக் குருக்கள் (இணுவில் கந்தசாமி கோயில் பிரதமகுரு)
கவிமாமணி ந வீரமணிஐயர்
அருட்கவி சி விநாசித்தம்பி

**6-45** மணி: வாழ்த்துரை
திரு இரா சுந்தரலிங்கம் (ஓய்வு பெற்ற வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்)

**6-55** மணி: பண்ணிசை அரங்கு:
பாட்டு — சங்கீதபூஷணம் ந. வி மு நவரத்தினம்
வயலின் — திரு V. K குமாரசுவாமி
மிருதங்கம் — திரு S. துரைராசா

**7-40** மணி: சிறப்பு சொற்பொழிவு
★ "திருமுறைகளில் தமிழ்"
பேராசிரியர் அ. சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**8 25** மணி: கருத்தரங்கம்
★ "திருமுறைகளில் வாழ்வியல்"
தலைவர்: கம்பவாரிதி திரு. இ ஜெயராஜ்

கருத்துரை வழங்குவோர்:
சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை
தமிழருவி திரு. த. சிவகுமாரன் B.A.
திருமதி மனோன்மணி - சண்முகதாஸ் M.A.

**10-30** மணி: நன்றியுரை
செல்வன் இ. இரவீந்திரநாதன் (பொருளாளர் இ. தொ. ச.)

இணுவில் கந்தசுவாமி கோயில்,
இளந்தொண்டர் சபை.

திருமுறை விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.
**எவரெஸ்ட் கல்வி நிலையம்**
இணுவில்.
[சி-804]

---

உ
தும்பிக்கையான் துணை

## திருமண அழைப்பு

★★★★★★★★★★★★★★★★★★★★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ ஆண்டு பங்குனித்திங்கள் 9 ஆம் நாள் [23 – 03 – 1995] வியாழக்கிழமை மு.ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**தேவதாஸ்**
(மொழிபெயர்ப்பாளர் யாழ்ப்பாணம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
**சந்தனரூபி**
[ஆசிரியை யா/வேலணை நடராஜா வித்தியாசாலை]
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணவிழா நல்லூர் சட்டநாதர் கோயிலடி திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, மணவிழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

குறிப்பு: மன்னிக்கவும் தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி
நா இலகுப்பிள்ளை
தற்போதைய முகவரி:
இல 11, யமுனா வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
புங்குடுதீவு - 02.

திரு. திருமதி
நா. துரைசாமி (வீரசிங்கம்)
[முன்னாள் கிராமசபை உபதலைவரும் - உறுப்பினரும்]
தற்போதைய முகவரி:
129, முஸ்லிம் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
நிரந்தர முகவரி:
வேலணை மேற்கு வேலணை - 8.

[35788]

---

உ
சிவமயம்

## விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவவருடம் பங்குனி மாதம் 8 ஆம் நாள் (22-03-1995) புதன்கிழமை பகல் 9-32 மணிக்கு மேல் 11-22 மணிவரையில் வரும் அனுஷ நக்ஷசத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்

வரன்
பன்னாலை-வரத்தலம் கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும் ஆகிய
பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்கள்
(இளைப்பாறிய அதிபர்)
ஸ்ரீமதி சபா ஞானேஸ்வரி
தம்பதிகளின்
ஏகபுத்திரன்
திருவளர் செல்வன்
**கணேஷானந்தன்**
அவர்கட்கும்

வது
கொழும்பு-முகத்துவாரம்
அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம்
பிரம்மஸ்ரீ சடாட்சர ஸ்ரீதரசர்மா
(இளைப்பாறிய பல்கலைக்கழக விரிவுரையாளர்)
ஸ்ரீமதி ராஜேஸ்வரி
தம்பதிகளின்
ஏகபுத்திரி
திருவளர் செல்வி
**குருபவானி**
அவர்கட்கும்

கன்னிகாதான திருமாங்கல்யதாரன பாணிக்கிரகண விவாஹம் செய்ய வரத்தலம் கற்பக விநாயகப்பெருமான் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம், முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும் முகூர்த்தத்திற்கு இஷ்டமித்திர குடும்பசமேதராய் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்,

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ இ. சபாரத்தினக்குருக்கள்
ஸ்ரீமதி. சபா. ஞானேஸ்வரி,
பிரம்மஸ்ரீ கண்ணலிங்கசர்மா ஷிவானந்தன்
ஸ்ரீமதி. லலிதா ஷிவானந்தன்

பிரம்மஸ்ரீ சடாட்சரஸ்ரீதரசர்மா
ஸ்ரீமதி. ஸ்ரீதர ராஜேஸ்வரி

333/1, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

2/2, டெம்பிள் றோட்,
களுபோவில,
தெஹிவளை,
கொழும்பு.

[35593]

---

உ

## திருமண மங்கல வாழ்த்து

திரு. திருமதி மாணிக்கலிங்கம்
(மண்டைதீவு)
அவர்களின் புத்திரன்
திருநிறை செல்வன்
**சசிகாந்தன்**
அவர்களுக்கும்

திரு. திருமதி சிவரெத்தினம்
(வேலணை)
அவர்களின் புத்திரி
திருநிறை செல்வி
**ஜெகதீஸ்வரி**
அவர்களுக்கும்

திருமணம் 19 - 03 - 95 பிரான்சில் உள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் இனிது வாழ்கவென வாழ்த்துவோர்

க. மாணிக்கலிங்கம் குடும்பத்தினர்
(கொக்குவில்)

10, RUE des Aulnay
93600 Aulnes Sous Bois,
FRANCE.

(35789)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
392/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## மகிழ்ச்சி மட்டும் தானா?

தமது காவலில் இருந்த பதினாறு போர்க் கைதிகளையும் விடுதலைப் புலிகள் விடுதலை செய்தது குறித்து அரசாங்கம் பெரும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் இந்தச் செயற்பாடு அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

போர்க் கைதிகள் மொத்தம் பதினேழு நாள்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவற்றில் பல நாள்கள் தண்ணீரும் இன்றியே உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களது உண்ணாவிரதம் குறித்து அரசுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

உண்ணாவிரதம் இருந்த கைதிகளின் பெற்றோர் தமது பிள்ளைகளின் விடுதலைக்கு உதவுமாறு கெஞ்சிக் கேட்டு கடிதங்கள் அனுப்பியிருந்தனர்.

இவற்றில் எதுவுமே தனக்குத் தெரியாதது போல சந்திரிகா "கப்சிப்" என்று மௌனமாக இருந்தார். போர்க் கைதிகள் விடயத்தில் கை வைப்பதற்கு அவர் அஞ்சினார். அதற்குக் காரணமும் இருந்தது.

தாம் நிராகரித்த தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மூன்று அம்சங்களில் ஒன்றை, விடுதலைப் புலிகள் கைதிகள் விடுதலைக்கு நிபந்தனையாக வைத்தால் என்ன செய்வது?

பேச்சுவார்த்தையின் போது ஏற்க மறுத்த ஒரு கோரிக்கையை, போர்க் கைதிகளை விடுவிப்பதற்காக ஏற்றுக் கொண்டால் அது தமக்கு ஏற்படும் பெரும் தோல்வியாகும் என்று அஞ்சினார் சந்திரிகா.

போர்க் கைதிகளை விடுவிப்பதானால், பாதுகாப்புப் படையினரின் காவலில் உள்ள விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை பரிமாறிக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை வந்தாலும், அதற்கும் இணங்க முடியாது. இணங்குவதாயின், இராணுவத்தின் காலைப் பிடித்துக் கெஞ்ச நேரிடும்.

புதிய அரசு பதவிக்கு வந்ததும், விசாரணை, வழக்கு இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்களை விடுவித்த போதோ பாதுகாப்புப் படையினர் தரப்பிலிருந்து கண்டன விமர்சனங்கள் வந்தன.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை வெளியே விட்டதால், கொழும்பில் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்பட்டுவிட்டதாக படையினர் அரசை வெருட்டினர். பயமுறுத்தல் விட்டிருந்தனர். எனவே போர்க்கைதிகளின் விடுதலைக்குப் பதிலாக விடுதலைப் புலிகள் உறுப்பினர்களைப் பரிமாற முடியாத நிலை.

இவற்றை எல்லாம் ஆழ, அகலமாக யோசித்துவிட்டுத்தான், உண்ணாவிரதிகள் விடயத்தில் சந்திரிகா மௌன விரதம் பூண்டார்.

உண்ணாவிரதிகள் தற்செயலாக இறக்க நேரிட்டால், பேச்சுவார்த்தையில் பெற முடியாத தமது கோரிக்கைகளை அடைவதற்காக போர்க் கைதிகளை உண்ணாவிரதம் இருக்கப் புலிகளே நிர்ப்பந்தித்தார்கள்; தூண்டினார்கள் — என்று பிரசாரத்தினால் தாம் தப்பிக் கொள்ளலாம் என்பது சந்திரிகாவின் உத்தியாக இருந்தது.

இந்த உத்திகள், தந்திரங்களை எல்லாம் தலைவர் பிரபாகரன் தமது மனித நேயத்தினால், மானிடத்துவ மகிமையினால், நிபந்தனை எதுவுமில்லாத விடுதலை அறிவிப்பினால் அடித்து வீழ்த்தி விட்டார்! ஒரு வகையில் அரசாங்கம் எதிர்நோக்கவிருந்த பெரும் நெருக்கடியிலிருந்தும் காப்பாற்றி இருக்கிறார்!!

இதற்காக அரசாங்கம் என்ன கைமாறு செய்யப் போகிறது? வெறும் மகிழ்ச்சி தெரிவித்தால் மட்டும் போதுமா? மகள் ஜனாதிபதி நன்றி கெட்டதனமாக, மரியாதைக்கேனும் பிரதியுபகாரத்துக்குப் பின்நின்றாலும், தாய் பிரதமராவது அந்த நல்ல பண்பைச் சொல்லிக் கொடுப்பாரா என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்!

# புதிய ஆசிரியசேவைதிட்டம் துரித கதியில் தயாரிப்பு

கொழும்பு, மார்ச் 20

ஆசிரியர்களை, புதிய ஆசிரிய சேவையில் இணைப்பது சம்பந்தமான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கான ஆதரவை ஆசிரிய தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஆசிரிய சேவையில் ஆசிரியர்களை இணைப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் போது சென்ற வருடம் ஒக்டோபர் 6ஆம் திகதி ஒரு ஆசிரியர் பாடசாலையில் எந்த அந்தஸ்த்தில் இருந்தார் என்பது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்கள் இல்லாதிருக்கும் பயிற்சி ஆசிரியர்கள், இந்த புதிய சேவையில் சேர்க்கப்பட மாட்டார்கள்.

இலங்கை ஆசிரிய சேவையின் புதிய சம்பள விகிதம், ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அமுல் செய்யப்படவிருக்கிறது.

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். விபீரிஸ் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும், பிரதிப் பணிப்பாளர்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சென்ற வருடம் ஒக்டோபர் 6ஆம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் இந்த புதிய சம்பள உயர்விற்கு தகுதி உடையோராவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-5]

## தென்னாபிரிக்க அதிகாரிகள் கொழும்பில்

கொழும்பு, மார்ச் 18

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் எடுத்துவரும் சமாதான முயற்சிகள், மற்றும் உத்தேச அரசமைப்பு சீர்திருத்தம் என்பன குறித்து அறிந்து கொள்வதற்காக

தென்னாபிரிக்காவில் இருந்து அரசமைப்புத் திணைக்கள அதிகாரிகள் நால்வர் கொழும்பு வந்துள்ளனர்.

தென்னாபிரிக்காவின் அரசமைப்புத் திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ஏ.பி. போத்தா தலைமையில் இவர்கள் இங்கு வந்துள்ளனர்.

## அரசியல்துறை பேராசிரியர் வருகை

கொழும்பு, மார்ச் 20

சமஷ்டி அரசமைப்பு பற்றிய கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக கனடாவின் பிரபல அரசியல் தத்துவப் பேராசிரியர் சார்ள்ஸ் ரெயிலர் கொழும்பு வருகின்றார்.

"தேசியவாதம்; சமஷ்டி அரசமைப்பு; கியூபெக்கின் எதிர்காலம்" என்ற தலைப்பில் அவர் இன்று கொழும்பில் பேசவிருக்கிறார்.

கனடா, மொன்ட்ரீலில் மக்கில் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராக இவர் பணிபுரிந்து வருகிறார்.

உலகில் தற்போது வாழும் அரசியல் தத்துவப் பேராசிரியர்களில் இவர் முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

# ஊழல் விசாரணைகள் இன்று முதல் ஆரம்பம்

அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் இதுவரை நடைபெற்ற ஊழல்கள், ஒழுங்கீனங்கள் பற்றி விசாரணை செய்யும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் பகிரங்க அமர்வுகளில் மேற்கொள்ளப்படும்.

பொதுமக்களிடம் இருந்தும் ஏற்கனவே மனுக்களை அனுப்பியவர்களிடம் இருந்தும் விசாரணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்து கொள்ளும்.

1977 ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் திகதி தொடக்கம் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆம் திகதி வரையிலான காலத்தில்— சில அரச நிறுவனங்களின் முகாமைத்துவம், நிர்வாகம், செயற்பாடு என்பனவற்றிலேயே முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆணைக்குழு ஒன்று —ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தது.

இக்குழுவிற்கு இதுவரை 35 மனுக்கள் கிடைத்திருப்பதாகவும் அவற்றுள் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற எயர்லங்கா, எயர்பஸ் கொள்வனவு, ஹில்டன் ஹோட்டல் திட்டம், பஸ்ஸை பொருத்தி அமைக்கும் திட்டம், தோட்ட முகாமைத்துவம் தனியாரிடம் வழங்கப்பட்டமை, அரச நிறுவன பங்கு விற்பனை, வீடமைப்பு நிர்மாணத்துறை நெடுஞ்சாலைகள் அமைச்சு உட்பட பல முக்கிய அமைச்சுக்கள், நிறுவனங்களின் முக்கிய ஒப்பந்தங்கள், கேள்விப்பத்திரங்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணைகளுக்கு ஆணைக்குழு முக்கியத்துவம் அளிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றப் புலனாய்வுப்பிரிவு, கணக்காய்வாளர் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியனவும் விசாரணைகளின் போது ஆணைக்குழுவிற்கு உதவவுள்ளன. (ஐ-5)

# பாதிக்கப்பட்டோர் விவரம் வடமராட்சியில் சேகரிப்பு

## புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

1983 ஆம் ஆண்டின் பின்னர் வன்செயல்கள் மற்றும் இயற்கை காரணிகளால் சொத்து இழப்பு, உயிரிழப்பு, மற்றும் அங்கவீனம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளானவர்களின் விவரங்கள் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பகுதியில் பாதிக்கப்பட்டோர் விவரங்கள் கிராமசேவகர் பிரிவு ரீதியாக கடந்த 17ஆம் திகதி முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இன்று திங்கட்கிழமை கெருடாவில் கிழக்கு கிராம சேவகர் பிரிவு, கிராம சேவகர் அலுவலகத்திலும் —

எதிர்வரும் 26 ஆம் திகதி கெருடாவில் வடக்கு கிராம சேவகர் பிரிவுக்கு வள்ளுவர் சனசமூக நிலையத்திலும் —

27ஆம் திகதி வல்வெட்டித்துறை வடமேற்கு கிராம சேவகர் பிரிவுக்கு ஆதிசக்தி சனசமூக நிலையத்திலும் —

28 ஆம் திகதி வல்வெட்டித்துறை வடமத்தி கிராம சேவகர் பிரிவுக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்திலும் —

29ஆம் திகதி வல்வெட்டித்துறை வடகிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு வாணி சனசமூக நிலையத்திலும் —

30ஆம் திகதி வல்வெட்டித்துறை தென்மேற்கு கிராம சேவகர் பிரிவுக்கு வல்வை சேவா சனசமூக நிலையத்திலும் —

31ஆம் திகதி வல்வெட்டித்துறை தென்கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்கு றெயின்போஸ் சனசமூக நிலையத்திலும் பாதிக்கப்பட்டோர் விவரங்கள் பதிவு செய்யப்படும். [ஐ-14]

சமாதானப்பாதையில் தோன்றியுள்ள

# இக்கட்டான நிலையினை நீக்க கைதிகள் விடுதலை உதவட்டும்

## நற்சமூக நடு நிலையம் அறிக்கை

உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த யுத்தக் கைதிகள் அனைவரும் தமிழீழ தேசியத் தலைவரினால் மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட செயலானது, சமாதானப் பாதையில் இன்று தோன்றியிருக்கும் இக்கட்டான நிலையை நீக்கவும், அரசாங்கம் காலந்தாழ்த்தாது சமாதானத்தை சீரிய பாதையில் முன்னெடுக்கவும் உதவட்டும்.

— கைதிகள் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக யாழ். நற்சமூக நடு நிலையம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருந்த சிங்களக் கைதிகள் கடந்த 18 நாட்களாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர் தம்மை விடுவிக்க அரசாங்கம் முயற்சி செய்வதற்கான தூண்டுதலாக இது அமைய வேண்டுமென அவர்கள் கருதினர். முன்னரே இதே வழியில் தாம் மேற்கொண்ட முயற்சிகளால் உடல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகியிருந்தும், புதிய அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்தவர்களாக அம் முயற்சியை மீளவும் ஆரம்பித்தனர்.

யுத்தக்கைதிகள் தமது நிலைமையையும் எதிர்பார்ப்புகளையும் பல வழிகளில் தென்பகுதிக்கு தெரிவித்தும், பதில் நடவடிக்கை எதுவும் அற்ற நிலையில் நம்பிக்கையீனத்தின் விளிம்பிற்கே தள்ளப்பட்டிருந்தனர். இந்நிலையில் எமது தேசியத் தலைவர் 16-03-95 அன்று உடல் நிலை மோசமாக இருந்த இரு கைதிகளை விடுதலை செய்தார். இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கும், பதில் செயற்பாடு எதுவும் மேற்கொள்ளப்படும் அறிகுறிகள் தென்படாதிருந்தும், மீளவும் ஒரு தலைப்பட்சமாக, உண்ணாவிரதமிருந்த மீதிக் கைதிகள் யாவரையும் அவர் பெருந்தன்மையாக விடுதலை செய்துள்ளார். இச்செயல் எமக்குப் பெருமகிழ்ச்சியையூட்டுகிறது. தமிழினம் அறவழிப் போராட்ட முறைகளையும் மனித உயிரையும், மாண்பையும் எவ்வளவிற்கு மதிக்கிறது என்பதை விளக்குகிறது.

தம்மை விடுவிப்பதற்கான முயற்சியினால் கைதிகளுக்கு விளையக்கூடிய உயிராபத்து தமக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளையும் பொருட்படுத்தாது, அம் முயற்சி அவர்களின் ஒரு அடிப்படை உரிமை என்பதனால், விடுதலைப் புலிகள் அதற்கு இசைந்திருப்பர் என்பது வெளிப்படை.

மறுபுறம், இதே தமிழினம் தனது அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட போது கையாண்ட அறவழி முயற்சிகள் மதிக்கப்படாதது மாத்திரமல்ல, பலாத்காரத்தால் பதிலடியும் கொடுக்கப்பட்டமை, அவ்வினத்தை ஆயுதப் போராட்டத்தில் இறங்க நிர்ப்பந்தித்தது. இது, இன்று தென்பகுதி மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் உண்மை ஆகும்.

மனிதாபிமானத்திற்கு இங்கு அளிக்கப்பட்டுள்ள பெருமதிப்பானது. தமிழினம் வேண்டிநிற்கும் விடுதலை சார்பாக மனிதாபிமானம், நீதி சமத்துவ உணர்வு போன்றவற்றைத் தெற்கிலும், முழுஉலகிலும் உள்ளவர்களின் மனங்களிற் தூண்டவும், செயற்பட வைக்கவும். வழிகோலும் என்பது எமது ஆழமான நம்பிக்கை — என்று உள்ளது. (ஐ)

வடக்கு - கிழக்கு மாகாணசபையால்

# அச்சுக் கோர்ப்பாளர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

கையால் அச்சுக்கோப்பதற்கான பயிற்சி நெறி ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை மாகாண சபையின் அச்சகப் பகுதி செய்து வருகின்றது.

அந்த ஒரு வருடகால பயிற்சிநெறி — அரச அச்சக ஸ்தாபன அச்சகர் மற்றும் தலைவரினால் அனுமதிக்கப்பட்ட பாடத்திட்டங்களுக்கு அமைய நடத்தப்படும்.

இப்பயிற்சி நெறிக்கென தற்போது இருபது இளைஞர்களும், யுவதிகளும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

விதவைகள், மூன்று மாதங்களுக்கு மேல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோர், குறைந்த வருமானத்தைப் பெறும் குடும்பங்களைச் சார்ந்தோர் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆகியோருக்கு இப்பயிற்சி நெறியில் சேர முன்னுரிமை அளிக்கப்படும்.

பயிற்சி நெறிக்கான நிதியுதவி கனேடிய - சர்வதேச பல்கலைக்கழக சேவைப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளது.

இதன்படி பயிற்சியாளரின் சிறுடைத் தேவைகளுக்கென மாதாந்தம் 550 ரூபாவும் —

தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு விடுதி மற்றும் போக்குவரத்து செலவுகள் என்பனவும் வழங்கப்படும். [ஐ-5]

# வெங்காய செய்கைக்கு வங்கிக் கடன் உதவி

அராலி, மார்ச் 20

வலி. மேற்கு பிரதேசத்தில் பம்பாய் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு 'உற்பத்திக் கடன்' வழங்கப்படவுள்ளது.

இதனை மக்கள் வங்கி, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக வழங்கும்.

இதன்படி, இம்முறை அராலிப் பிரதேசத்திலுள்ள சுமார் நூறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரத்து 900 ரூபா கடனாக வழங்கப்படும்.

இத்தொகை 16 வீத வட்டியுடன் ஆறு மாதங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

அராலிப் பகுதி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் வலி. மேற்கு பிரதேச செயலர் ஊடாக எடுத்த முயற்சியின் பயனாகவே வங்கிக் கடன் வழங்கப்படவுள்ளது.

உற்பத்திக்கான விதை வெங்காயங்களை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினூடாக வழங்கவும் உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தினை சந்தைப்படுத்தவும், தற்போது ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்குத் தேவையான பம்பாய் வெங்காயவிதைகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. இவை கிலோ 800 ரூபா முதல் 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்தப் போகத்தில் அராலிப் பகுதியில் 200 ஏக்கர் காணியில் பம்பாய் வெங்காயம் பயிர் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-5-12)

## கூட்டணி கோரிக்கை

கொழும்பு மார்ச் 20

16 யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்து விடுதலைப் புலிகள் காட்டியிருக்கும் நல்லெண்ணத்துக்கு பிரதி உபகாரமாக அரசு சமாதானப் பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் உறுதி காட்ட வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான ஜோசப்பரராஜசிங்கம் கேட்டுள்ளார். [உ-7]

## ஆஸி கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடக்கு- கிழக்குப் பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள மந்தநிலை குறித்து ஆஸ்திரேலியா கவலை தெரிவித்துள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள சமாதான நிலையை ஏற்றவாறு பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வைக் காண அரசு முயற்சிக்க வேண்டும் என்றும் ஆஸ்திரேலிய அரசு கேட்டுள்ளது.(உ)

யாழ். மாவட்ட மாணவர்களின் அவலநிலை

# பெற்றோர் - புத்திஜீவிகளை கவலையுற வைக்கும் இன்றைய கல்வித்தர வீழ்ச்சி!

ஈழத்தில் கல்வியில் சிறந்த மாவட்டமாகவும் வழிகாட்டியாகவும் இருந்துவந்த யாழ். மாவட்டத்தின் கல்வித்தரம் குறைவடைந்து; அதன் எதிர்காலம் கேள்விக்குறியாக மாறிவரும் நிலை பெற்றோர்- புத்திஜீவிகளைக் கவலை கொள்ளச் செய்கின்றது.

எதிரியானவன் எம்மை அழிப்பதற்கு கல்வியை இலக்காக வைத்து மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நாம் பாதிக்கப்பட்டுவிட்டோமா என்று எண்ணும் அளவுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் அமைந்துவிடுகின்றன.

### யாழ். மாவட்டத்தில்

1ஏ.பி. தரத்தில் 42 பாடசாலைகள்
1சி. தரத்தில் 38 பாடசாலைகள்
2ஆம் தரத்தில் 141 பாடசாலைகள்
3ஆம் தரத்தில் 263 பாடசாலைகள்
தேசியக் கல்லூரிகள் 03
தனியார் கல்லூரிகள் 05

எல்லாமாக 492 முறை சார்ந்த கல்விக் கூடங்களும், 460 க்கு மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்களும் செயற்படுகின்றன. மாணவர்கள் கல்விக்காக ஒரு நாளில் மூன்றில் இரண்டு பங்கு நேரத்தைச் செலவழிக்கின்றனர். அத்துடன் பெருந்தொகைப்பணமும் மூலவளங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால்—

★ எழுத வாசிக்கத் தெரியாதோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகின்றது.

★ ஆரம்ப / இடைநிலை வகுப்புக்களுடன் கல்விக்கு முழுக்குப் போடும் நிலை அதிகரித்துச் செல்கின்றது.

★ உயர் கல்விக்குத் தகுதி பெறும் நிலை அருகிக் கொண்டு செல்கின்றது.

★ கல்வித் தரம் குறைவடைந்து வருகின்றது.

அண்மைக்காலத்தில் மாணவர்களின் கல்வித் தரம் குறைவடைந்து செல்கின்றது என்பதைத் தரவுகள் வெளிக்காட்டி நிற்கின்றன.

கடந்த வருடம் நடைபெற்ற முதல் நிலைத் தேர்வில் [5 ஆம் ஆண்டு] 868 மாணவர்கள் தாய்மொழி [தமிழ்] பாடத்தில் ஒரு புள்ளியைத் தானும் பெற முடியாமல் பூச்சியத்தைப் பெறுபேறாகப் பெற்றுள்ளனர். இள நிலைத் தேர்வில் [8 ஆம் ஆண்டு] 2,300 மாணவர்கள் ஒரு புள்ளியைத் தானும் பெற முடியாமல் பூச்சியத்தைப் பெறுபேறாகப் பெற்றுள்ளனர்.

இவற்றை எடுத்துக் பார்க்கையில் 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்ற ஔவையின் வாக்கும் ''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு'' என்ற வள்ளுவனின் வாய்மொழியும் கேள்விக் குறியாகின்றது. கோப்பாய் கல்விக் கோட்டத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 11வரையுள்ள மாணவர்களில் ,3027 பேர் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் என இனங்காணப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாகும் எனக் கூறப்படுகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற முதல் நிலை, இள நிலை, தேர்வுகளின் பெறுபேறுகளை அடிப்படையாக வைத்து கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் உள்ள 43 பாடசாலைகளிலும் செய்யப்பட்ட மதிப்பீடுகளின் படி.—

— முதல் நிலைத் தேர்வுக்கு (ஆண்டு 5) 1589 மாணவர்கள் தோற்றினர். அவர்களில் தாய்மொழியில் [illegible] 585 பேர், சித்தியடையாதவர்கள் 63.2 வீதத்தினர்.

கணிதத்தில் சித்தியடைந்தவர்கள் 340 பேர். சித்தியடையாதவர்கள் 78.7 வீதத்தினர். மேற்படி பரீட்சையில் ஏழு பாடசாலைகளில் தாய்மொழி கணிதம் ஆகிய பாடங்களில் ஒருவர் தானும் சித்தியடையவில்லை.

இள நிலைத் தேர்வுக்கு [ஆண்டு 8] தோற்றிய 1287 மாணவர்களில் தமிழ்மொழியில் சித்தியடைந்தவர்கள் 630 பேர். சித்தியடையாதவர்கள் 51 05 வீதத்தினர். கணித பாடத்தில் சித்தியடைந்தவர்கள் 106 பேர் சித்தியடையாதவர்கள் 91.77 வீதத்தினர். இளநிலைத் தேர்வுக்கு 24 பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் தோற்றிய போதிலும் 9 பாடசாலைகளிலிருந்து கணித பாடத்தில் ஒருவர் தானும் சித்தியடையவில்லை.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 1,181 மாணவர்களில் 04-81 வீதத்தினர் மட்டும் (57 பேர்) புலமைப் பரிசில் பெறத் தகுதி பெற்றனர். 19 பாடசாலைகளிலிருந்து ஒருவர் தானும் தகுதி பெறவில்லை.

சாதாரண வசதி நிலையில் உள்ள கோப்பாய்க் கல்விக் கோட்டத்தின் நிலை இத்தகையது எனில், இதிலும் பார்க்க குறைவான ஆசிரியர் ஆளணி, ஏனைய வளவசதிகள் இல்லாத கல்விக் கோட்டங்களின் நிலை எப்படி என்பது சொல்லித் தெரிய வேண்டியது அல்ல.

அதிகளவு பணத்தையும் பெருமளவு நேரத்தையும் கல்விக்காகச் செலவு செய்தும் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில தானும் அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்ளாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது கவனிக்கத்தக்கது.

இதற்கு யார் பொறுப்பு என்பது தெளிவுபடுத்தப்படாமல் இருந்து வருகின்றது. இந்த நிலைக்கு பொருத்தமான தீர்வு காணப்பட வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

"பரீட்சையில் தோல்வி அடைந்தால் பாடசாலைகள் மீதும் — சித்தியடைந்தால் தனியார் கல்வி நிலையங்கள் மீதும் பொறுப்புக்களைச் சுமத்துவது ஆரோக்கியமானது அல்ல'' என கல்வித் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. சின்னத்தம்பி அண்மையில் கூறிய கருத்துக்கள் நினைவில் கொள்ளத்தக்கவை.

ஞானஆதவன்

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இதய அஞ்சலி

எமது கல்லூரி மாணவன்
த. கிரிதரனின் (95 உயிரியல் பிரிவு)
தந்தையாரான

**Dr. கி. தங்கவேலாயுதம்**

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையுடன் தோழா நீஉறும் துயரில்-
பங்கெடுத்தோம்
கிரிதரனே உன் தந்தை துஞ்சினரோ? - அறியாத
வேளையிலே காலன்தன் வினையதனை
காட்டினனோ;

நாளையொரு நாள்விடியும் நண்ப!

அன்னாரின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருடன் பங்கெடுத்துக் கொள்ளும்
யாழ் இந்து மாணவர்கள்
(95 பிரிவு)

[35793]

## மரண அறிவித்தல்கள்

### Dr. கிருஷ்ணபிள்ளை தங்கவேலாயுதம்
(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)

இருபாலையை வதிவிடமாகக் கொண்ட Dr. கிருஷ்ணபிள்ளை தங்கவேலாயுதம் 19-3 95 அன்று காலமாகி விட்டார்.

இவர் பத்மேஸ்வரியின் அன்புக் கணவரும், பொலிகண்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற S C. குலசேகரம் கமலாம்பிகை தம்பதிகளின் மருமகனும், யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களான கிரிதரன் [உயிரியல் 95], சுகிதரன் [உயிரியல் 97], தவரூபன், [ஆண்டு 11] ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. கந்தசாமி [ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி], மனோன்மணி, கமலாதேவி, விமலாதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திலகவதி, காலஞ்சென்ற Dr சிதம்பரநாதன், Dr. சுந்தரலிங்கம் [வைத்திய அதிகாரி, சங்கானை], வீரசுந்தரம் [தொற்றாவத்தை], கலகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று [20 3-95] நண்பகல் 12 மணியளவில் இருபாலை இல்லத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தகவல்:
த கிரிதரன்
(மகன்)

தபால் கந்தோர் ஒழுங்கை,
இருபாலை.
35796)

### வல்லிபுரம் முத்துக்கிருஷ்ணன்

புலோலி கிழக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னைநாள் கலாவதி நகைமாளிகை [பருத்தித்துறை] ஊழியருமான வல்லிபுரம் முத்துக்கிருஷ்ணன் 19 03-95 அன்று காலமானார்

அன்னார் இராசபூபதியின் அன்புக் கணவரும், நர்மதாவின் (யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித். ஆண்டு 12) அன்புத் தகப்பனாரும், சேகரின் [பழைய மாணவன் யாழ் மத்திய கல்லூரி A/L 1995] மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 10, செம்மணி வீதி, நல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (20-03-95) காலை 9-00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராசபூபதி, முத்துக்கிருஷ்ணன்
(மனைவி)

10, செம்மணி வீதி,
நல்லூர்.
(35795)

### தாமோதரம்பிள்ளை சிவானந்தன்
### திருமதி. சிவானந்தன் மாலினிதேவி

வவுனியாவைச் சேர்ந்த சிவானந்தன் மாலினிதேவி தம்பதியினர் 2-3-95 அன்று லண்டனில் அகால மரணமானார்கள்.

இவர்கள் வவுனியா வைரவர் கோயில் வீதி 42 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை-கண்மணி ஆகியோரின் அன்பு மகனும், அன்பு மருமகளும் வவுனியா புகையிரத வீதி குட்செட் றோட்டைச் சேர்ந்த திரு இராமநாதன் - திருமதி கனகம்மா ஆகியோரின் அன்பு மகளும் - அன்பு மருமகனும், சிவகாமி [லண்டன்], சிவகுரு [முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் இ.போ. ச) சிவபாலன் [கச்சேரி, வவுனியா], சிவசோதி, சிவநாயகி [லண்டன்], சிவயோகம், சிவராணி ஆகியோரின் சகோதரனும் - மைத்துனியும் உதயகுமார் [கச்சேரி, வவுனியா], சாந்தினி [பிரான்ஸ்], சுஜேந்திரகுமார் [பிரான்ஸ்], ஜெயந்தினி [லண்டன்] ஆகியோரின் சகோதரியும் - மைத்துனரும், நடராசா [லண்டன்], இமெல்டா [ஸ்ரீலங்கா ரெலிகொம் வவுனியா], விமலா [ஆசிரியை வவுனியா], அருணா செல்லத்துரை [ரூபவாகினி கூட்டுத்தாபனம்], கனகசபை [லண்டன்], வைகுந்தநாதன் [கச்சேரி வவுனியா], நல்லநாதன் [பிள்ளையார் மெட்டல் யாழ்ப்பாணம்], ஆகியோரின் மைத்துனரும், சகோதரியும், சிவதர்சினி [கச்சேரி, வவுனியா], தனபாலசிங்கம் [பிரான்ஸ்], விஜயநிர்மலா [பிரான்ஸ்], வெற்றிக்குமரன் [லண்டன்] ஆகியோரின் சகலனும், மைத்துனியுமாவர்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் 15-03-1995 அன்று லண்டனில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
ந. நல்லநாதன்

இல. 7, கைலாசபிள்ளையார் கோயில்
பின் வீதி,
நல்லூர்.
[35798]

" இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர்வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# புலிகளுடன் எவ்வித இணக்கத்திற்கும் வரமாட்டாராம் ஜெயலலிதா

சென்னை, மார்ச் 20

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தான் எந்தவித இணக்கத்திற்கு வரப்போவதில்லை என்றும்—

எந்தவித பயங்கரவாத நடவடிக்கையையும் தான் அனுமதிக்கப்போவதில்லை என்றும்—

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டசபையில் உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகளின் சட்ட விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு தமிழக மாநில அரசுக்கு இந்திய மத்திய அரசு உதவி புரியவில்லை என்றும்—

சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகளைப் பிடிப்பதற்கு தனது அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் அவர் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நான்கு வருடங்களுக்குமேலாக— இந்த வழக்கு இழுபட்டு வருவதால்— சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்புமாறு கடந்த மூன்று வருடங்களாக மத்திய அரசை கோரி வருகின்றோம்.

மத்திய அரசு இதுபற்றி கவனமெடுக்கவில்லை இந்தப் பிரச்சினையின் பாரதூரதன்மையை உணர்ந்து— இப்போதாவது அவர்களை திருப்பி அனுப்ப நடவடிக்கை வேண்டும்.

எந்தவித வழக்குகளிலும் சம்பந்தப்படாத இலங்கைத் தமிழர்களை தடுத்து வைப்பது நல்லது அல்ல.

இவர்கள் தாயகத்திற்கு திரும்ப விருப்பம் கொண்டுள்ளனர்.

இவர்கள் எந்தவொரு போராட்டக் குழுவையும் சேர்ந்தவர்களல்லர். தமிழக அரசின் கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாமையால் அவர்கள் மீது குற்றம் சுமத்த முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம்.

இந்த நிலையில் சிறையுடைப்பு குறித்து தமிழக அரசை எதிர்க் கட்சிகள் குற்றஞ் சாட்டுவது நீதியற்றது.

வெளிநாட்டார் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரசைகளைக் கைது செய்து தடுத்து வைப்பதற்கு தமிழக அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் — என்ற கோரிக்கைக்கு மத்தியஅரசு இணங்கவில்லை.

மாநில அரசின் ஆலோசனைகளை ஏற்று சில தீவிரவாதிகளையாவது கைது செய்திருக்கலாம். தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது மாநில அரசுக்கு மட்டும் பொறுப்பான நடவடிக்கை அல்ல.

மாநிலங்களுக்கு எவ்வித உதவியையும் வழங்காது — எவ்வித செயல் நடவடிக்கையுமின்றி—மத்திய அரசு வெறுமனே ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் தெரிவிப்பது நாட்டின் பந்தோபஸ்துக்கு நல்லது அல்ல — என்றும் அவர் தெரிவித்தார்.

## காரைநகருக்கு கப்பல் சேவை

கொழும்பு, மார்ச் 20

காரைநகர் திருமணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் வருடாந்த உற்சவத்தில் கலந்துகொள்ள விரும்பும் கொழும்பு அடியார்களின் நன்மை கருதி எதிர்வரும் 27 ஆம் திகதி திருகோணமலையிலிருந்து விசேட கப்பல் ஒன்று கொழும்பு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### புலிகளின்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமர்சகர்கள் —

சமாதானப் பேச்சுக்களும், மோதல் தவிர்ப்பும் குலையுமா என்பதனை முடிவு செய்யும் நெருக்கடியான பொறுப்பை அரசின் தலையில் சுமத்துகின்ற வகையில் விடுதலைப் புலிகள் சாதுரியமாகச் செயற்பட்டுள்ளார்கள் — என்று தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு — அவற்றை நிராகரிப்பது என்ற முடிவை மீள் பரிசீலனை செய்வதற்கு — விடுதலைப் புலிகள் அரசுக்கு காலக்கெடு விதித்திருப்பதால் —

ஜனாதிபதி சந்திரிகா விரைந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் — அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். [அ-7]

### மாணவர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொள்ளும்.

இதுதவிர—

இறுதித் தவணைப் பரீட்சைகளில் மாணவர் தேர்ச்சி பெறாமல் அதே வகுப்பில் தொடர்ந்து இரண்டு தடவைகள் கல்வி கற்பதைத் தவிர்ப்பதற்கும் —

மாணவர்கள் இடைநடுவில் பாடசாலையை விட்டு விலகுவதைத் தவிர்ப்பதற்கும் — நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையை விட்டு விலகும் மாணவர்களுக்கென, முறைசாராக் கல்வித்திட்டங்கள், முதியோர் கல்வித் திட்டங்களை பாடசாலைகளிலேயே ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### கிறீஸ்தவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அசைத்து குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

யாத்திரீகர்கள்குழு நேற்று மாலை வவுனியா திரும்பியதாகக் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

### எம்மை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சுமுக நிலைக்குத் திரும்பிவிடுவர் என்றும் —

அவர்களைப் பரிசோதித்த டாக்டர் கித்சிறி குணரத்ன தெரிவித்தார்

மாங்குளம் பொலீஸ் நிலையத்தில் வைத்து விடுதலைப் புலிகளிடம் கைதாகிய கான்ஸ்டபிள் பி ஜி தர்மவர்த்தன தமது விடுதலையின் பின் கொழும்பில் வைத்துக் கூறியதாவது:-

எமது விடுதலை நாம் எதிர்பார்க்காத ஒரு திடீர் சம்பவமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்த காலத்தில் அங்குள்ள பொதுமக்களை எங்களால் சந்திக்க முடிந்தது.

யாழ். மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றனர்; நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்கின்றனர்; அவர்களுக்கு யுத்தம் வெறுத்துப்போய் விட்டது; அவர்கள் பல வருடங்களாக யுத்தத்தினால் பாதிப்புற்றுள்ளனர்; அவர்கள் கூறுவதைக் கேட்டு நாம் கவலையடைந்தோம். அவர்களுக்கு வசதி எதுவும் கிடையாது; மிகத் துக்ககரமான வாழ்க்கை நடத்துகின்றனர்'' — என்றார்.

மற்றொரு கான்ஸ்டபிளான பீ. எம். குமார வீரவர்த்தன கொழும்பில் வைத்துக் கூறியதாவது:-

யுத்தக் கைதிகளை விடுவிப்பதில் ஸ்ரீலங்கா அரசு கூடிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

1958 இற்குப் பின்னர் வந்த அரசியல்வாதிகளில் சந்திரிகா மீது தான் ஓரளவுக்கேனும் புலிகள் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் தற்போது அந்த நம்பிக்கையையும் அவர்கள் இழந்துள்ளனர். அரசு சமாதானத்தை ஏற்படுத்துவதில் விசுவாசமாக இருக்கின்றதா என்பதில் அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது — என்றார்.

## இடமாற்ற சபையிலிருந்து
## ஆசிரிய தொழிற் சங்க பிரதிநிதி நீக்கப்பட்டார்

முல்லைத்தீவு, மார்ச். 20

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர் இடமாற்ற சபையிலிருந்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முல்லைத்தீவு பிரதிநிதி நீக்கப்பட்டார்.

இதற்கான உத்தரவை முல்லைத்தீவு மாவட்டத்தின் புதிய கல்விப் பணிப்பாளர் திரு. சி புலந்திரன் விடுத்தார்.

அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் வைத்தே கல்விப் பணிப்பாளர் இந்த உத்தரவை விடுத்ததாக அறிய வந்தது.

ஆசிரிய தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கும் ஆசிரியர்கள், தமது சங்கத்துக்குச் செலுத்தும் சந்தா தொகை, சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்களப் பிரிவினால் அந்த ஆசிரியரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்பட்டு குறிப்பிட்ட தொழிற் சங்கத்துக்கு வழங்கப்படும் நடைமுறையை இக்கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் சுட்டிக் காட்டினார்.

இந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள எந்த ஆசிரியரிடமிருந்தும் நீண்ட காலமாக தொழிற் சங்கத்துக்கான சந்தாப் பணம்கழிக்கப்படவில்லை என்றும் —

அதனால்பதிவுசெய்யப்பட்ட — உத்தியோக பூர்வமான — எந்தத் தொழிற் சங்கத்திலும் முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள் எவரும் அங்கம் வகிக்கவில்லை என்றும் —

ஆசிரியர்கள் தொழிற் சங்கத்தில் அங்கம் வகிக்காததால் ஆசிரியர் இடமாற்ற சபையில் தொழிற்சங்கப் பிரதிநிதி என்று எவரும் இடம்பெற முடியாது என்றும்—

கல்விப்பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து—

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி என்ற முறையில் கூட்டத்துக்கு சமுகம் தந்திருந்த உறுப்பினர் தாம் கூட்டத்திலிருந்து வெளியேறுவதாக எனக் கோரியதாகவும்—

கல்விப் பணிப்பாளரும் ஏனைய சம்பந்தப்பட்டோரும் அதனையே செய்யும்படி அவருக்குக் கூறியதை அடுத்து, அவர் கூட்டத்திலிருந்து வெளியேறியதாகவும் தெரியவந்தது. (உ)

### வெளிநாட்டு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எழுத்து மூலம் கடிதம் அனுப்ப —

மறுபுறத்தில் பேச்சுக்கு வெளிநாட்டு மத்தியஸ்தரை அரசு விரும்பவில்லை என்று — முன்னுக்குப் பின் முரணாக — அரசுப் பிரமுகர் ஒருவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

### ரணிலின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவு செய்யப்பட்ட சரத் கொங்கஹேயும், தினேஸ் தொடங்கொடவும் தேசியப் பட்டியல் எம். பிக்களாக பதவி ஏற்றனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சேகு இஸ்ஸதீன் என்பவரை தேசியப்பட்டியல் எம் பியாக நியமிக்கா விட்டால் தாங்கள் கட்சியிலிருந்து விலகப்போவதாக சாகுல் ஹமீதுவும், முகமதுவும் தலைமைப் பீடத்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

தாம் விரும்புபவர்களையே நியமிக்கப் போவதாகவும் —

இதனை விரும்பாதவர்கள் பதவி விலகினால் அதனை ஏற்கத் தாம் தயாராகவிருப்பதாகவும் ரணில் பதில் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்

கிழக்கு மாகாண முஸ்லிம் ஒருவரை ஐ. தே.கவின் எம். பியாக நியமிப்பது முஸ்லிம் காங்கிரஸுக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கும் என ரணில் கருதுவதாகவும் —

எதிர்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவைப் பெறலாம் என்ற நம்பிக்கையின் பேரிலேயே கிழக்கு முஸ்லிம் ஒருவரை எம். பியாக்காமல் தவிர்க்க ரணில் விரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நெருக்கடியான கட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் அஷ்ரப்பை தமது பக்கம் இழுக்கமுடியும் என்று ரணில் விக்கிரமசிங்க கருதுவதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. (உ-எ)

### அரசே---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூடாது. அரசாங்கமே இறுதி முடிவு எடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

பூநகரியில் இருந்து வெளியேறுவதற்கு இராணுவம் விரும்பவில்லை; மறுத்து வருகிறது.

இது இங்குள்ள மக்கள் மத்தியில் அவநம்பிக்கையை தோற்றுவித்துள்ளது.

இராணுவம் குடாநாட்டை சூழவரத் தொடர்ந்து இருக்க விரும்புகிறது என்ற எண்ணத்தையே இது உருவாக்கியுள்ளது. இப்போதுள்ள இராணுவச் சுற்றிவளைப்பை அது நீக்க விரும்பவில்லை என்று மக்கள் கருதுகிறார்கள்.

அதனால் அவர்கள் சமாதான முயற்சிகளில்— பேச்சுக்களில் — நம்பிக்கை இழக்கும் நிலை தோன்றியுள்ளது — என்றார். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள் சுமந்த முடிக்கு - மகர யாழ் தந்த கிரீடம்



"மகரயாழ்'' விருது பெற்ற
டாக்டர் து. வி. ஜெயகுலராஜா

நீ முழங்காமல்
மழை பொழிந்திருக்கிறாய்!
காகிதத் தாளில் படம் வரையாமல்
கல்லுடைத்திருக்கிறாய்!

இந்த மண்ணிற்காக
மறைந்திருந்து நீ தரித்த முள்முடி
மக்கள் முன் வந்திருக்கிறது!
நீ
நினைக்காமல்
செய்த சேவை
மக்கள் மனதில் நிலைத்திருக்கிறது!
நீ தரிசித்த துன்பமெல்லாம்
மனிதத்திற்காக என்பதால்
பரிசுத்தமானது!

உன் சேவையை
விளங்க வைத்து
மகரயாழ் துலங்கிக் கொண்டது!

உன்னை வாழ்த்துகிறோம்.
உன் சேவை நிறைவுற்றது என்றல்ல
இந்த மகரயாழ்.
வது உன் இசையை
இந்த தேசத்திற்கு
இன்னும்
வேண்டிநிற்கிறது.

(சி-807) -போஸ்கோ-

## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995ஆம் ஆண்டிற்கான
"மகர யாழ்'' விருதினைப்
பெறுகின்ற

வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
அவர்களை

✶ மனமார வாழ்த்துகின்றோம் ✶

ஆரணி மில்ஸ்,
இல. 246, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்,

திரு. வை. அருணகிரி,
குடும்பத்தினர்.

(35799)

## வெளிவந்து விட்டது!

# முகாமை

[முகாமைத்துவ சஞ்சிகையின் முதல் இதழ்]
ஆசிரியர்கள்:-

மா. நடராஜசுந்தரம்
[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்]
மா. சின்னத்தம்பி
[விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்]

✶ முகாமைத்துவத்துறை மாணவர்கள்
✶ வங்கியாளர்கள்
✶ முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் மற்றும் முகாமையாளர் பலரின் வேணவாவை நிறைவு செய்ய
வெளிவருகின்றது

முகாமை

முகாமைத்துவ ஆய்வு வட்டத்துக்காக
வெளியிடுவோர்:-
"போஸ்கோ''

[சி/808]

## கண்ணீர்ப் பூக்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 95ம் ஆண்டு
உயிரியல் பிரிவு மாணவன்
செல்வன் கிரிதரனின் தந்தையாரான

**Dr. கி. தங்கவேலாயுதம்**

அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியடைகிறோம். அன்னாரின் பிரிவினால் துயருற்று நிற்கும் எமது நண்பனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது இதய அஞ்சலிகளை தெரிவித்துக் கொண்டு அத்துயரத்தில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

— நண்பர்கள்,
(95ம் ஆண்டு உயர்தர, மாணவர்கள்)

(35794)